# இயற்கை சிரிக்கிறது



97

நா.பாண்டுரங்கன். M.A.

**இயற்கை சிரிக்கிறது!**

நா. பாண்டுரங்கன் M. A.

விலை ரூ. 1.

அருணோதயம் வெளியீடு 33

முதற்பதிப்பு மே, 1957.

உரிமை ஆசிரியருடையது.

விலை ரூ. 1.

நவபாரத் பிரஸ், 76, எல்லீஸ் ரோட், சென்னை—2.

# இயற்கை சிரிக்கிறது!

276 — 8
35
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல் துறை.

நா. பாண்டுரங்கன் M. A.
தமிழ் விரிவுரையாளர்,
புதுக்கல்லூரி. சென்னை.

அருணோதயம்
இராயப்பேட்டை :: சென்னை-14

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழியல்துறை.



'முத்தமிழ்க் கலா வித்துவரத்தினம்'
அமரர் அவ்வை சண்முகம் அவர்கள் நினைவாக
மதுரை காமராஜ் பல்கலைக் கழகத்துக்கு
அன்புடன் அளிக்கப்பட்டது.

**27–1–1979**

காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.

# இரண்டு ரோஜாக்கள்!

பூக்கடைக்குப் பக்கத்தில் ஒரு பூக்கூடை!

பூக்கூடையும் ஒரு பூக்கடைதான்.

இரண்டு பூக்கடைகள்!

முன்னதில் நிஜப் பூக்கள் குவிந்து கிடந்தன. பின்னதில் மெய்போல் தோற்றும் பொய்ப் பூக்கள் குவிக்கப் பட்டிருந்தன.

பொய்ப் பூ ஒரு கூடையில்—அதுதான் கடை!
மெய்ப்பூ ஒரு கடையில்—அங்கே அது நிறைந்த பல கூடைகள்.

மெய்ப்பூக் கடைக்காரன் தனக்கு அருகில் வந்து அன்று அமர்ந்திருந்த பொய்ப் பூக்கடைக்காரனைப் பார்த்தான். சிரிப்பு அவன் இதழ்களைத் திறந்தது.

நிஜப் பூக்களைச் சுற்றி வண்டுகள் மொய்த்துக் கொண்டிருந்தன!

பொய்ப் பூக்களைச் சுற்றி நிஜப் பூக் கடைக்காரன் 'மலர் விழிகளிலிருந்து' கிளம்பி வந்த 'பரிகாச வண்டுகள்' மொய்த்துக்கொண்டிருந்தன!

இரு கடைக்காரர்களும் சொல்லி வைத்தாற்போல ஏதோ வேலையாகத் தத்தம் இடத்தைவிட்டு வெளியே போனார்கள்!

* * *

நிஜ ரோஜாக்கள் பொய் ரோஜாக்களைப் பார்த்தன. பொய் ரோஜாவின் கவர்ச்சியைப் பார்த்ததும் ஒரு கணம் நிஜ ரோஜாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

"நான் நாடாளும் ராஜா! நீ நாடகமேடை ராஜா!— யார் உயர்ந்தவர்?"

—நிஜ ரோஜா, காகித ரோஜாவைப் பார்த்துக் கேலியாகக் கேட்டுவிட்டு அலட்சியமாகச் சிரித்தது!

"நாட்டில் உலவும் பிச்சைக்காரனைவிட நாடகமேடையில் உலவும் பிச்சைக்காரன்தான் எல்லாவற்றிலும் உயர்ந்தவன்!"

—காகித ரோஜா, அமைதியுடன் பதிலளித்துவிட்டுச் சாந்தமாகச் சிரித்தது!

நிஜ ரோஜாவுக்குக் கோபம் பொத்துக்கொண்டு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது!

"நான்—உண்மை! நீ, பொய்! எது சிறந்தது?"

—அலைகளில் குதிக்கும் நீர்த்துளி போல் வந்தது நிஜ ரோஜாவின் கேள்வி.

"நான் செயற்கை!—நீ, இயற்கை! — இரண்டும் உண்மைகள்தாம். உண்மைகள் எல்லாமே உயர்ந்தவை யல்லவா?"

—இலைகளில் இருக்கும் பனித்துளி போல் வந்தது காகித ரோஜாவின் இந்தப் பதில்!

நிஜ ரோஜாவின் மனம், காகித ரோஜாவுக்கு எப்படியாவது பாடம் கற்பிக்க வேண்டும் என்று துடியாய்த் துடித்தது.

நேற்றுத்தான் முட்டையிலிருந்து வெடித்து வந்த கோழிக் குஞ்சின் நெஞ்சு, நெடுநாள் வாழ்ந்து வரும் வேங்கையின் நெஞ்சுடன் பலப் பரீட்சைக்கு வருவதா?

நிஜ ரோஜா, நீட்டி இழுத்துக்கொண்டு பேசத் தொடங்கியது.

“பொய் ரோஜாவே! தண்ணீர் பட்டதும் என் உடல் மின்னும்; உன் உடல்?...”

காகித ரோஜா, பதிலை யோசித்தது.

“நிஜ ரோஜா நான்!.....வண்டுகள் என்னிடம் வரும்; வண்டு விழி மாதர்கள் என்னிடம் வருவர்; வண்டு விழி மாதர்களுக்குப் பரிசு தர நினைக்கும் வசீகர வாலிபர்கள் என்னிடம் வருவர்; வண்டாய் மாறி வாழ்க்கையை வண்ணமலர்க் காடாக்கி வாழும் கவிஞர்கள் என்னிடம் வருவர்......என் சிங்காதனமோ, சிலைகளின் கழுத்து—சிலைகளாகி சொக்க வைக்கும், சிங்காரிகளின் கூந்தல்—கலைகளையும் நாட்டின் உயர்நிலைகளையும் பெருக்கும் அறிஞர்களின் மார்பு!—இதுமட்டுமா? என்னாலான மாலை இல்லாமல் எந்த விழாவுமே நடைபெறமாட்டேன் என்கிறது! என் மாலை இல்லாத விழாவின் சிறப்பு, கதிரவன் இல்லாத காலை—மலர்கள் இல்லாத சோலை—சாயம் இல்லாத சேலை! அம்மட்டோ! அழகுக் கிளிகளின்

அலகு, சிற்றிடையாளின் அதரம், அது தரும் சுவை யைப்போல் விரிந்த வானத்தின் வனப்பு.....இவை யெல்லாம் என்னைப் பார்த்தே முதல் முதலில் நிறம் தீட் டிக்கொண்டதாகக் 'கல்பனா முனிவர்' இயற்றிய 'புஷ்ப புரர்ணத்தில்' ஆதாரம் 'பரந்த வான்பால் நிலாப்போல்' ஜொலிக்கிறது!......"

நிஜ ரோஜாவின் பிரதாபத்தைக் கேட்கக் கேட்கக் காகித ரோஜாவின் மௌனம் வளர்ந்தது. அதன் மௌனம் வளர்ந்த வேகத்தைவிட நிஜ ரோஜாவின் 'அரட்டையும்' வளரத் தொடங்கியது!

"கண்ணீரை அடக்கிக்கொள், காகித ரோஜாவே! இன்னும் என் புகழைக் கேள்! மழையில் நனைந்து வெயி லில் காய்ந்து, பனியில் உலர்ந்து பாடுபட்டு வாழும் குடி சைக் குமரியின் சொர சொரப்பான கன்னங்கள் உன் இதழ்கள்!—என் இதழ்களோ, சிரிப்பிலே பிறந்து சிரிப் பிலே வளர்ந்து, சிரிப்பிலேயே வாழ்ந்து—கொழு கொழு வென்றிருக்கும் மாளிகை மனோகரிகளின் வழவழப்பான கன்னங்கள்! என்னுடைய உயிர் பிச்சைக்காரத் தென்றலைப் பிரபுவாக்கும் நறுமணம்! என்னுடைய பாட்டு, கனிகளின் சுவையையெல்லாம் வெட்கிப் போகச் செய்யும் இனிய மது! தேன்! உனக்கோ, உயிர்— உணர்வு ஒன்றுமே கிடையாது! அரும்பி, போதாகி, மலரும் மாப்பேறு எனக்கு உண்டு! உனக்கோ அது ஒன்றும் இல்லை! தூரத்தில் இருக்கும்போது ஆளை மயக்குவாய்! பக்கத்தில் வந்ததும் சிறிது வியப்பிற்குப் பிறகு அலட்சியத்தையும் அருவருப்பையுமே பெறுவாய்! நானோ, எட்ட இருக்கும்போது தேனான மணத்தைத்

தருவேன், அருகே வரும்போது வருகிற அவரையே—அவளையே பெறுவேன்! வேடிக்கை ரோஜாவே! நீ உண்டானதே உலகில் நான் உண்டானதால். நீ ஒரு 'காப்பி!'—கவிஞர்கள் கூட உன்னைக் காய்கிறார்கள். உன் மதிப்பு, உலகில் மிகவும் மட்டம்—மட்டம்—மட்டம்! கவியரசர் பாரதிதாசன் 'குயில்' கூவுவதில் கொஞ்சம் கேள்......' **இயற்கை உனக்களிக்கும் மணமலரிருக்கையில் ஏனிந்தக் காகிதப் பூ மகளே !**

—தேர்தலில் வெற்றிகண்ட அபேட்சகரைப்போல ஒரு பார்வை பொய் ரோஜாவைப் பார்த்துவிட்டு, நிஜ ரோஜா பேச்சை நிறுத்தியது.

காகித ரோஜாவின் மௌனம் இரண்டு மணி இரவைப்போல இருந்தது. இருள் கலைந்தது, பேசத் தொடங்கியது.

"தொல்காப்பியம் படித்த புலவனைப்போல் பழம் புகழே பாடும் மணமலரே! நட்டுவைத்த கன்றில் தண்ணீரைத் தொடர்ந்து கொட்டியதும் விடு விடுவென்று வளர்ந்து அடர்ந்து படரும் செடியில், வெடித்து மலர்வதே உன் பிறப்பு—யந்திரம்போல, உன் பிறப்பு, உடல் வேலையை அடிப்படையாகக் கொண்டது. என் பிறப்போ, மூளைவேலையை அடிப்படையாகக் கொண்டது! நீ தொழில்? நான் - கலை! தொழிலை உண்டாக்குவது வயிற்றில் கிளம்பும் அடுப்புத் தீ! கலையை உண்டாக்குவது கருத்தில் கிளம்பும் காட்டுத் தீ! தொழில்—மிருகம்! கலை—மனிதன்! மனிதனும், மிருகம்தான். ஆனால் மிருகத்தைவிட மனிதனே உயர்ந்தவன். அதாவது உன்னைவிட நான்! என்ன புரிகிறதா?"

காகித ரோஜா இப்படிக் கேட்டது.

இரு கடைக்காரார்களும் அவரவர் இடத்தில் வந்து அமர்ந்தனர்.

காகித ரோஜா, பதில் சொல்லியதே தவிர, உண்மையில் மூன்றும் வகுப்பில் 'எம்.ஏ.' பாஸ் செய்த மாணவனைப்போல் வருந்திற்று!

ஓரணு! அரையணு! இரண்டணு!—இப்படி வந்து கொண்டிருந்த துட்டுக்கள், நிஜ ரோஜாக்களை, 'ரிஸ்ட்வாட்ச்' கட்டிய கைகள், வளையல் குலுங்கும் கைகள்—இப்படிப்பட்ட கைகளில் ஏற்றுமதிசெய்து வைத்துக்கொண்டிருந்தன! காகித ரோஜாவைக் கண்கள் கண்டன. கால்கள் நின்றன. சிறு சிரிப்புக் கிளம்பியது. கால்கள் தொடர்ந்து நடந்தன!—ஒன்றுகூட விற்பனையாகவில்லை.

"ஆமாம்! நம்முடைய மதிப்பு மிகவும் மட்டம்தான். நாம் ஏன் பிறவி எடுத்தோம்? முன்பிருந்தபடி மெல்லிய காகிதமாகவே இருந்திருந்தாலாவது, புதுமணம் வீசும் ஊதுபத்திகள்—புது நகைகள்—புது வெள்ளிப் பாத்திரங்கள் இவைகளைச் சுற்றிக் கட்டவாவது பயன்பட்டிருப்போம்! தனியே, சாயமாக இருந்திருந்தாலாவது—வெள்ளைப் பட்டு நூலில் ஐக்கியமாகி—பட்டுத் துணியாலான ஜாக்கெட்டாகி யிருக்கலாம். ஜன்மம் சாபல்யமாகி இருக்கும்!—ஏன் இப்பிறவி எடுத்தோம்! ஏன் இப்பிறவி எடுத்தோம்?..."

காகித ரோஜாவின் மனதில் பயங்கர மேகங்கள் சூழ்ந்து கர்ஜித்தன. திடீரென அறிவுக் காற்று வீசியது! மேகங்கள் எங்கோ சிதறி ஓடிச் சிதைந்து மறைந்தன!

“ஏன் பிறவி எடுத்தோம்? என்று கேட்கிருயே! முட்டாளே! பிறவி எடுப்பது உன் கையிலா இருக்கிறது. உன்னை, நீயா உண்டாக்கிக்கொண்டாய்?” பேய்க் காற்ருய் வீசிய அறிவின் பேச்சு இது!......

காகித ரோஜாக் கடைக்காரன் நிஜ ரோஜாக் கடைக் காரனைப் பார்த்து “அண்ணே! உன்பாடு கொண் டாட்டம் தான்” என்ருன்.

“இல்லையப்பா இல்லை! அரையணுவும் காலணு வுமா இதுவரை பத்தணுத்தான் சேர்ந்திருக்கு. போட்ட முதல் ஐந்து ரூபாய். இன்னும் இங்கே ஏழு குடலையில் பூ அப்படியே இருக்கு. நாலு நாளைக்கு வீட்டு அடுப்பிலே புகை கிளம்பணும்னு நாலு பூக்கூட இங்கே தங்காமல் இருந்தால்தான் நடக்கும்!”

அடிபட்ட பாம்பின் சீறல் அவன் பெருமூச்சாகவெளி வந்தது.

அடிவானத்திலிருந்து சந்தன வில்லையைப்போல் கிளம்பிய சந்திரன், நடுவானத்திற்கு வந்து வெள்ளித் தட்டைப்போல் ஆனுன்! எதிர்த்த கடையில் மணி ஒன்பது அடித்தது! நிஜ ரோஜா போலி ரோஜாவைக் கேலியாகப் பார்த்துச் சிரித்துக்கொண்டே இருந்தது.

நீண்ட வெள்ளைக் கொக்கு பறந்துவந்து உட்காரு வதைப்போல, ஒரு ‘ஸ்டுடி பேக்கர்’ பூக்கடையின் முன் வந்து நின்றது. காரின் ஒளிவீசிய முன் விளக்குகள் இரண்டும் நின்றன. கைவிரல்களில் அணிந்திருந்த மோதிரத்தில் பதித்திருந்த வைர விளக்குகள் ஒளிவிட, திறக்கப்பட்ட கதவிலிருந்து தொந்தியை முன்னே இறக் கிக்கொண்டே ஓர் பெரிய ஆசாமி இறங்கி நின்ருர்.

ஆமாம்—நாடகக் கம்பெனி மானேஜர்!

பள்ளியறைப் புதுப்பெண்போல் நாணிக்கோணி நெளிந்து வளைந்து எழுந்து நின்ருன் நிஜப் பூக் கடைக்காரன்.

"எவ்வளவுக்கு எஜமான் பூ கட்டவேண்டும்?"

"உன் பூ வேண்டாம்"

"எஜமான்!"

"அதோ! அந்தப் பூ வேண்டும்!"

"அது காகிதப்பூ எஜமான்!" சிரித்துக்கொண்டே சொன்ஞன்.

"மடையர்கள்! இன்றிலிருந்து புது நாடகம். பூக் கடைச் சீனுக்குப் பூ வாங்க மறந்துவிட்டார்கள். அரை மணி நேரம் இருக்கு, ஆட்டம் ஆரம்பிக்க, இப்பத்தான் அறிவு உதயமாயிருக்கு! மடப்பசங்க! நல்ல வேளை—இங்கே இந்தப் பூக்கிடைச்சுது."

பத்து ரூபாய் நோட்டை வாங்கிக்கொண்டு கை—காகிதப் பூக்கூடையைக் காரின் உள்ளே வைத்தது. ஆச்சரியத்தால் காகிதப் பூக்காரன் உலகை மறந்தான்! காகித ரோஜா நிஜ ரோஜாவைப் பார்த்துச் சிரித்தது!...

ஆத்திரம்—அவமானம்—அடங்காத ஆசை—மூன்றும் நிஜ ரோஜாக் கடைக்காரனை வாட்டி வருத்தின! குடலைகளில் நிறைந்திருந்த வாடிய ரோஜாக்களை அப் படியே போகும் வழியிலிருந்த குப்பை மேட்டில் உதறிக் கொட்டிவிட்டு அவன் மேலே நடந்து மறைந்தான்! குடு குடுவென்று ஓடிவந்த ஒரு நாய் பூக்களை முகர்ந்து பார்த்து

விட்டு முன்னங் கால்களாலும் பின்னங் கால்களாலும் அவற்றைச் சிதறவைத்துச் சின்னுபின்னப்படுத்திக் குப்பையைக் கிளறிக் குழி பறித்து அதில் உருண்டு புரண்டது!

"ஐயோ அம்மாடி! அவ்வளவும் ரோஜாப்பூ!"—ஒரு கத்தல்!—ஆர்வத்தோடு குனிந்து இரு கைகொள்ளு மட்டும் ரோஜாக்களை அள்ளி அணைத்துக்கொண்டு எழுந்தாள் அங்கு வந்த பரட்டைத்தலைப் பிச்சைக்காரச் சிறுமி!

"சீ கழுதே! கீழே போடு! மந்திரிச்சு ஜபிச்சது, பீடை கழிச்சா பூவா இருக்குமடி! மடக்கி இழுத்திடும் கால் கையை! போடு கீழே! கையை உதறடி! பிசாசே! உதறு!

சிறுமியின் தாய் கூச்சலிட்டாள்!

தலையை ஆட்டி 'லொள் லொள்' என்று நாய் குரைத்தது!

கண்ணீரும் பூக்களும் கீழே உதிர்ந்தன!

# அரசியல்

“செல்லப்பிள்ளையாகவே இருக்கட்டுமே! இந்த வெள்ளி நிலவு. அதற்காகப் பல்லாயிரம் பணிப் பெண்களா வேண்டும் அந்தப் பிள்ளையைப் பாதுகாக்க? வானத் தந்தையின் மூளை குழம்பித்தான் போயிருக்க வேண்டும்.”—என்றெல்லாம் அந்த நல்லவர் எண்ணுவார். நகைக்கும் விண்மீன்களுக்கிடையே நகரும் வெண்ணிலவைப் பார்க்கும்போதெல்லாம் அந்த நல்லவர் இப்படித்தான் எண்ணுவார்.

நான்கு பிள்ளைகள் அந்த நல்லவருக்கு. அந்தப் பிள்ளைகளின் வளர்ப்பைப் பற்றி நாளொன்றுக்கு நாலாயிரம் எண்ணங்கள் எழும் அவர் மனதில்.

கண்ணைப்போல அவர் தன் பிள்ளைகளைக் காத்து வந்தார். கண், கண்ணிற்கருவிழி, கருவிழியிலுள்ள கருமணி, மணியாடு பாவை—இவைகளைப் போல்தான் அவர் தன் பிள்ளைகளை எண்ணிப் போற்றிக் காத்து வளர்த்துவந்தார்.

ஓராண்டு ஈராண்டு வயதில்வேறுபாடு உள்ளவர்கள் அந்த நால்வரும்.

செதுக்கிய சலவைக்கல் சிலை—பார்த்துப் பார்த்துத் தீட்டிய பலவண்ண ஓவியம்—வார்த்தெடுக்கப் பெற்ற பொன் விக்ரகம்—இவைகளில் இருக்கும் அழகெல்லாம் ஒன்று கலந்து ஓருருவாகி உடலும் உயிரும் பெற்ற அந்த நல்லவரின் பிள்ளைகளாகத் துள்ளி விளையாடின. விளையாடும் அந்தக் குழந்தைகளைக் கண்ட ஊரார் அப்படித் தான் உரையாடினர்.

மான் பிள்ளைகள் என்பர் ஊரார்.

நல்லவரின் உள்ளமோ தேன் பிள்ளைகள் என்று சொல்லும்.

நல்லவரின் அந்த நான்கு பிள்ளைகளும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தனர்.

நாட்டிய மங்கையைப் போல் காலம் குதித்துக் கொண்டே நகர்ந்தது. ஜதி சொல்லுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கும் நட்டுவனாரைப்போல் தன் குழந்தைகளின் வளர்ச்சியிலேயே எண்ணமும் செயலுமாக இருந்தார் நல்லவர்.

அவர் வீட்டுத் தோட்டத்திலே நடப்பெற்ற ஒட்டு மாங்கன்று, செடியாகி வளர்ந்து மரமாகி நின்று கிளையில் கனி தொங்கிக்கொண்டு இலைகள் சலசலக்கச் சிரித்தது.

அவர் வீட்டுத் தொழுவத்திலே துள்ளி விளையாடிய கன்று பசுவாகி நின்று மாலைநேரம் வந்ததும் பால் தருவதற்காக அம்மா என்று அலறி அழைத்தது.

தங்கப் பதுமைகளாகக் காத்துவந்த அவர் சிங்கக் குழந்தைகள் இப்போது சிறுவர்களானதால் வீட்டில்

ஒருவரிடமும் சொல்லாமல் விளையாடுவதற்காக ஒரு பக்கத்தில் நீரோடும் ஆற்றின் மறுபக்கம் மணல்மேட்டை நோக்கி ஓடினர். குறிப்பிட்ட இடத்தில் கூடினர். நெடு நேரம் விளையாடினர்.

ஆற்றின் படுகையில் குடியானவன் வளர்த்து வந்த ஓர் அழகிய மயில் படுகையிலிருந்து ஓடும் நீரைப் பறந்த வண்ணம் கடந்து மணல்மேட்டில் வந்து நின்றது.

சிறுவர்களின் விளையாட்டு நின்றது.

வியப்போடு மயிலையே சூழ்ந்து நின்றனர். மயில் அடியெடுத்துவைத்து நடக்கும்போது அஞ்சி விலகி நின்றனர். அதன் தொண்டையின் இடைவிடாத அசைவு அவர்களுக்குக் கண்டறியாப் புதுமையாக இருந்தது.

முதல் பையன் முறுவல் தவழும் முகத்தினனாகி "எனக்கு மயிலை நினைத்தாலே மகிழ்ச்சி. ஏனென்றால் மனிதனைக் கொல்லும் பாம்பை அது கொத்திக் கொன்று தின்றுவிடுகிறதல்லவா?" என்று கூறிவிட்டுத் திரும்பினான்.

இரண்டாவது பையன் அங்கே கிடந்த களிமண் உருண்டையிலிருந்து சிறிது பெயர்த்து உருட்டிக்கொண்டிருந்தான்.

மூன்றாவது பையனுக்கு ஒரே சிரிப்பு, 'அழகிய மயிலே—அழகிய மயிலே!' என்று பாடத் தொடங்கி விட்டான்.

நான்காவது பையன்—அவனைக் காணாது மூவரும் திடுக்கிட்டனர். மயிலைக் காண்பதிலேயே தங்களை மறந்

திருந்த வேளைபார்த்துக் கடைசிச் சிறுவன் எங்கோ நடையைக் கட்டிவிட்டிருந்தான்.

மூவரும் திடுக்கிட்டுத் திகைத்து நின்றனர். நல்ல வேளை கரையிலிருந்த தோட்டத்து மரக்கிளையிலிருந்து குதித்துக் கூவிக்கொண்டே ஓடிவந்தான் கடைசித் தம்பி! அவனுடைய இடது கையின் விரல்களில் சிக்கிய ஒரு வண்ணாத்திப்பூச்சி துடித்துக்கொண்டிருந்தது. வலது கையில் ஒரு மாங்காயை வைத்துக் கடித்துத் துப்பிக் கொண்டிருந்தான் அவன். வளைந்து சென்ற ஆற்றின் தொலைவில் வளர்ந்து கிடந்த நாணற் காட்டிலிருந்து—சாப்பாட்டை முடித்துவிட்டதாலோ என்னவோ மேலெல்லாம் சந்தனத்தைப் பூசிக்கொண்டு—வெளியே கிளம்பிக் கொண்டிருந்தான் சந்திரன், வானத்தை நோக்கி! 'ஐயோ! இருட்டிவிட்டதே!' என்றான் முதல் பையன். நால்வரும் ஓட்டமும் நடையுமாகக் கிளம்பினர். 'அதோ! அப்பா போய்—அப்பா!' என்றான் கடைசிப் பையன். நடுநடுங்கி நின்றனர். பிள்ளைகளைத் தேடிக்கொண்டு வந்த நல்லவர் அவர்களைக் கண்டதும் பெருமூச்சுவிட்டு நின்றார். "அப்பா! இனிமேல் இப்படிச் செய்யமாட்டோம். தப்பு தப்பு!" என்று ஒரே குரலில் நால்வரும் கூறினர். "என்னடா குழந்தாய் இப்படித்தானா விளையாட்டு?" என்று இரண்டாவது பையனைப் பார்த்துச் சொன்னார் நல்லவர். "மண் அல்ல அப்பா. இதோ, பாருங்கள்" என்று சொல்லித் திரும்பியவாறு ஒரு பொருளை எடுத்துக்காட்டினான். களிமண்ணால் செய்யப் பெற்ற கலாப மயில் அது! "படிக்கும் நேரம் ஆயிற்றே பிள்ளைகளே, இப்படித்தானா விளையாட்டிலேயே காலத்

தைப் பாழ் செய்வது ?'' என்று துடிப்போடு கூறினுர் நல்லவர். "காலத்தை நீங்கள் பாழ்செய்தால் காலம் உங்களைப் பாழ்படுத்திவிடுமே'' என்று சற்றுக் கடுமை யான குரலிலேயே கூறினுர். நாம் நிகழ்காலத்தைக் கவ னித்தால்தான் வருங்காலம் நம்மைக் கவனிக்கும் என்று அடிக்கடி தம் குழந்தைகளுக்கு எடுத்துக் கூறுவார். அப்போதும் கூறினுர்.

காலம் தேரிலே பூட்டப்பெற்ற குதிரைகளைப்போல் ஓடியது. அந்தக் குதிரைகளின் கடிவாளக் கயிற்றில் கருத்தும், எதிரே, பாதையில் கண்ணும் வைத்தவாறே தேரைச் செலுத்தும் பாகனைப்போல நல்லவர் தம் பிள்ளை களின் ஒழுக்க வளர்ச்சியிலும் கல்வி மலர்ச்சியிலும் கண் ணுங் கருத்துமாக இருந்தார்! பொன்னையும் பொருளை யும் பிள்ளைகளின் அந்த வளர்ச்சிக்காக அள்ளிச் செல விட்டார்.

பத்துப் பதினைந்து மழைக் காலங்கள் வந்து மறைந் தன.

முதல் பையனுடைய உயர்கல்விப் பயிற்சி முடிந்த தும் அவனுடைய அறிவாற்றலைக் கண்டு அவன் பயின்ற கல்லூரியிலேயே பேராசிரியர் பதவியில் அமர்த்திக் கொண்டனர்.

முதல் மாதச் சம்பளத்தைத் தந்தையின் பாதங் களிலே வைத்து அதன்மீது தன்னுடைய சிரத்தைக் குவித்து வணங்கினுன் முதல் பையன். நல்லவரின் உள்ளம் மகிழ்ச்சியினுல் நிறைந்தது; உடல் அதனுல் சிலிர்த்தது!

இரண்டாவது பெயன் போதிய கல்வியோடு நின்று கொண்டு வேறு துறையிலே பயின்றான். பலன்?... இப்போது அவன் ஒரு சிற்பக் கலைஞன்! அவன் கையி லிருக்கும் உளி, கல்லிலே பட்டால் அது உடல் பெற்று உருப்பெற்று உயிர்பெற்றுக் கலுக்கெனச் சிரிக்கும்; கதை சொல்லும்; கவிபாடும்! நாட்டின் அமைச்சர் வரையில் அவன் புகழ் எட்டியது. கலைக்கூடத்தின் தலை வர் நிலையை அமைச்சர் இரண்டாவது பையனின் தலை யிலே சுமத்தினார்.

தங்க நாணயங்களை நல்லவரின் பாதங்களிலே கொட்டி அவைகளின் மீது தன் சிரத்தைக் குவித்து இரண்டாவது பையன் வணங்கினான். தந்தை அவனை மார்போடு அணைத்துக்கொண்டார்!

மூன்றாவது பையன் போதிய கல்வியோடு தன் கல் விப் பயிற்சியை முடித்துக்கொண்டு இசைப்பயிற்சியைத் தொடங்கி முடித்தான்.

அவன் கண்டத்திலிருந்து கிளம்பிய குரல் அரண்மனை வரையிலும் சென்று அரியணையிலிருந்த மன்னன் செவி களிலே நுழைந்து அவன் உள்ளத்திலே இழைந்தது. ஒரு புன்னகை-சிறு புன்னகை புரிந்து மன்னன் மூன்றா வது பையனைப் பார்த்து "இன்று முதல் நீ நம் பேரவை இசைவாணன்!" என்றான்.

நவரத்தினங்களை நல்லவரின் பாதங்களிலே இரு கைகளினாலும் அள்ளிக் குவித்து அவற்றில் தன் சிரத் தைக் குவித்து வணங்கினான் மூன்றாவது பையன்.

வணங்கிவிட்டுத் தன் முகத்தை மேலே தூக்கிய போது அவன் தோள்களிலே தந்தையின் கரங்கள்

பதிந்திருந்தன; அவன் முகத்தில் 'டப் டப்' என்று நீர்த்துளிகள் பட்டுத் தெறித்தன. மூடியிருந்த அவன் இமைகள் திறந்தன. விழிகள் நோக்கின. நல்லவரின் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து வழிந்தது - ஆனந்தக் கண்ணீர்! தந்தை மகற்காற்றும் உதவியைத் தக்கவாறு ஆற்றி முடித்தார் நல்லவர் என்று ஊரெல்லாம் சொல்லி மகிழ்ந்தது.

நல்லவரும் மகிழ்ந்தார். ஆனல்...கறையுள்ள நில வைப்போல் குறையுள்ள மகிழ்ச்சியே அது. கண்ணில் லாத குழந்தையைப் பெற்றெடுத்த அன்னேயைப் போலவே அந்த மகிழ்ச்சியை அவர் பெற்றெடுத்திருப்ப தாக எண்ணினர்!

நான்காவது பையன்...அவனுக்குப் படிப்பும் சரியாக வரவில்லே, வேறு எந்தக் கலேயும் அவனுக்குப் பிடிக்க வில்லே.

நல்லவர் எவ்வளவோ முயன்றும் பலனில்லாமல் போயிற்று. நான்காவது பையன் அவர் எண்ணியவாறு வரவில்லே. தான் எண்ணியவாறே அவன் நடந்தான் "ஐந்து விரல்களும் சரியாகவா அமைந்திருக்கின்றன?" என்று கூறி மனநிறைவு பெறுவார் நல்லவர். ஆனல்...

முதல் பையன்-அவனேப் பேராசிரியன் என்றே ஊரார் அழைத்தனர். அந்தப் பேராசிரியன் கல்லூரிக்கே தலேவராகவும் ஆகிவிட்டான் என்ற செய்தி நல்லவருக் குக் கிடைத்தது. "உங்கள் கடைசிப் பிள்ளே தெருவிலே விழுந்து கிடக்கிருன். கிட்டே சென்று பார்த்தோம். ஒரே நெடி-குடி மயக்கத்திலே உளறிக்கொண்டிருக்கிருன்!"

என்ற செய்தியும் அப்போதே நல்லவருக்குக் கிடைத்தது! தலையைத் தொங்கவிட்டுக் கொண்டார்! கடைசி மகனைக் கண்டித்தார் தந்தை. அதைக் கருதவே இல்லை மகன்!

இரண்டாவது பையன்—அவனைக் கலைஞன் என்றே அழைத்தனர் ஊரார். அந்தக் கலைஞனின் ஒரு சிலையைத் தலைநகரில் காணும் வாய்ப்பு பெற்ற மன்னன் வியந்து அந்தக் கலைஞனை அழைத்திருந்தான்.

வைரத்திலே ஒரு சிற்றுளிசெய்து கலைஞனுக்கு மன்னன் வழங்கினான் என்ற செய்தி நல்லவருக்குக் கிடைத்தது. இப்போது கையிலே கட்டாரியுடன் கண்ணிலே கனல் பறக்க ஒரு வாலிபன் ஓடிவந்து நல்லவரின் முன்னே நின்று "எங்கே உன் கடைசிப்பையன்? அந்தக் காதகன் எக்கே? என் விதவைத் தங்கையைத் தாயாக்கியதால் அவள் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொள்ளக் காரணமாயிருந்த அந்தப் பாவி எங்கே? அவன் மடிந்தால்தான் என் துன்பம் மடியும். எங்கே அவன்?" என்று கேட்டுத் துடித்தான்!

நல்லவர் 'ஐயோ! ஐயோ!' என்று தலையிலடித்துக் கொண்டு அழுதார். மகனின் வாழ்வுக்கு ஊறு வராமல் அரும்பாடுபட்டு நிலையை அமைதியாக்கினார். இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு எப்பொழுதாவது கடைசி மகன் வீட்டில் தனக்கு எதிரே வந்துவிட்டால் முகத்தை வேறுபக்கம் திருப்பிக்கொண்டு போய்விடுவார் நல்லவர்!

நீண்ட நேரம் இசை மழை பொழிந்து கொண்டிருந்த அந்த இசைவாணனின் இசையில் மயங்கிய மன்னன்,



மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.

அவனை வியப்போடு நோக்கி "இசைவாணா! நீ எவ்வளவு நேரம் இப்படியே பாடிக்கொண் டிருப்பாய்?" என்று கேட்டான். "அரசே! தங்களால் எத்தனை நாட்கள் என் எதிரே இப்படியே அமர்ந்து கேட்டுக்கொண் டிருக்க இயலும்?..." என்று இசைவாணன் பதிலிறுக்க "அப்படியா!" என்று வாய்பிளந்த மன்னன் இசைவாணனுக்கு ஒரு சிற்றூரைப் பரிசாக வழங்கினான்.

இந்தச் செய்தி நல்லவரின் காதில் விழுந்தது. "கொலை நடந்துவிட்டது! உன் கடைசிப் பையனைப் பிடித்துககொண்டு போகிறார்கள்" என்ற செய்தியை ஓடி வந்து ஒருவன் சொன்னான். மதுக்கடையில் கொள்ளைப் பொருள்களைப் பங்கு போட்டுக்கொள்ளும் போது சிலருடன் விளைந்த சண்டையில் கடைசிப் பையனும் கலந்திருந்தான் என்பதைக் கேள்வியுற்றபோது, "அவன் என் மகன் அல்லன்! எக்கேடாவது கெட்டுப் போகட்டும்!" என்று நல்லவர் கூறினார். அப்படிச் சொன்னாரே தவிர அப்படியே வாளாவிருக்க முடியவில்லை அவரால். எப்படியோ அவனை அந்த வழக்கிலிருந்து விடுவித்து அழைத்து வந்தார். அவனைத் தன் எதிரே நிறுத்திச் சொல்லத் தொடங்கினார்.

"களவு—கற்பழித்தல்—குடி—கொலை... உன்மீது இல்லாத பழி இல்லை! நீ என் மகனா? இல்லை!... முதல் மூன்று பிள்ளைகளைப் பாரடா! ஊர் புகழ்கிறது. மன்னனே புகழ்கிறான். அவர்களன்றோ பிள்ளைகள்! அவர்களுடைய கால் தூசிக்குக்கூட இணையாக உனக்கு அருகதை யில்லை. நீ என் பிள்ளையா? நீ ஒரு மனிதனா? என் உள்ளத்தில்தான் கருணையின் கடைசி எல்லை இருக்

கிறது. அந்த எல்லையில்கூட உனக்கு இடம் இனி இல்லை. இந்த உலகில் எங்கும் உனக்கு இடமில்லை. ஓடிப்போ! கண்காணாத இடத்தில் எங்கள் பெயரைச் சொல்லாது செத்து மடிந்துபோ!"— நல்லவர் கனலைக் கக்கினார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த கடைசிப் பையன் அவருக்குமுன் நிற்காது அன்று போனவன்தான். எங்கே போனானோ— வீட்டுக்குத் திரும்பவே இல்லை!

காலம், பாடிவரும் அலையைப்போல் ஓடிக்கொண் டிருந்தது. அந்த அலையைப் பார்த்துக்கொண்டு கரை யிலே அமர்ந்திருப்பவனின் உள்ளம்போல் நல்லவரின் நாட்கள் அமைந்து கழிந்துகொண் டிருந்தன.

நாட்டு மக்களுக்கு அவர்களின் தன்மானம் இப் போதுதான் கொழுந்துவிட் டெரியத் தொடங்கியது. "வேற்று நாட்டைச் சேர்ந்த மன்னன் வேண்டாம் எங்க ளுக்கு" என்று குரல் உயர்த்தினர்; கொடி உயர்த்தினர்; படை நடத்தினர்! படை என்றால் போர்ப் படையல்ல, மக்கள்படை—குரலே வாள்—உடலே கேடயம்!

மன்னன் அடக்குமுறையை அவிழ்த்து விட்டான்.

மக்கள் கொதித்து எழுந்தனர். கொதித்து எழுந்த மக்களுக்குத் தலைமை தாங்கியவர் சிறையிலடைக்கப் பட்டுத் தூக்கிலே ஏற்றப்பட்டார். புரட்சி பொசுங்கி விடுமோ என்று மக்கள் புழுவாய்த் துடித்தனர். அப் போது வீரன் ஒருவன் தோன்றி வழிகாட்டினான். மன்னன் நாட்டை விட்டு ஓடி மறைந்தான்.

புரட்சி வென்றது. புதுவாழ்வு பூத்தது. வேற்று நாட்டான் ஓடிவிட்டான். சொந்த நாட்டான் நாட்டை

ஆளவேண்டும். யார் ஆள்வது? புதிய வீரனையே மன்னனாக புரட்சிக்குழு முடிவு செய்தது. அந்த முடிவு நாள் மன்னன் முடிசூட்டுவிழா நாள் என்று முரசறைந்து நாடெல்லாம் அறிவிக்கப்பட்டது.

நல்லவரின் முதல் பையன் பேராசிரியனை அழைத்துப் புது வேந்தனுக்கு வரவேற்பிதழ் எழுதச் சொல்லி அதைப் பொன்னேட்டிலே தீட்டினர். நல்லவரின் இரண்டாவது பையன் கலைஞனை அழைத்துப் புதிய மணி மண்டபம் அமைக்கக் கட்டளையிட்டனர். அதிலேதான் முடிசூட்டு விழா நடைபெற இருந்தது. நல்லவரின் மூன்றாவது பையன் இசைவாணனை அழைத்து மங்கல விழாப் பாட்டு இசைக்கத் தயாராகுமாறு கட்டளை யிட்டனர்.

இந்த ஏற்பாடுகளெல்லாம் ஆட்சிக்குழு அமைத்தவை. விழா நாள் வந்தது.

மக்கள் புதிய மன்னனைப் பார்க்கக் கடலெனத் திரண்டனர். விழா தொடங்கியது. அரியணையில் புதிய மன்னன் அமர்ந்தான்.

மக்கள் வாழ்த்தொலி வானைப் பிளந்தது.

கலைஞனின் மணிமண்டபத்தின் விளிம்புகள் மக்களின் நெருக்கத்தால் இடிந்து சிதறின.

இசைவாணன் பாடிக்கொண்டிருந்த மங்கல வாழ்த்துப் பாடலுக்கு எவருமே செவி சாய்க்கவில்லை.

மக்கள் கூட்டம் கட்டுக்கடங்காததாயிற்று.

நவரத்னம் இழைத்த முடியை மன்னனின் தலை யிலே வழக்கத்திற் கேற்றவாறு ஓர் உழவன் சூட்டினன்.

அவையிலிருந்த நல்லவர் அப்பொழுதுதான் மன்ன னின் முகத்தை நன்கு பார்த்தார். உற்று உற்றுப் பார்த் தார். கண்களைக் கசக்கிக்கொண்டு பார்த்தார். அரி யணையில் இருந்த மன்னன் அவர் விரட்டியடித்த அவ ருடைய நான்காவது பிள்ளைதான்! நல்லவர் மூர்ச்சை யாகிக் கீழே சாய்ந்தார்!

# சிறிய நிலவும் பெரிய நட்சத்திரமும்

சிமண்ட் தரையில் விழுந்த பாதரசம் சின்னஞ்சிறு துளிகளாய்ச் சிதறிக் கிடப்பதைப்போல பரந்த வான மெங்கும் நட்சத்திரங்கள் இறைந்து கிடந்தன.

எல்லையற்ற தொலைவில் நிலவுலகத்தைச் சுற்றிக் கொண்டிருந்தது, எழில் நிலவு.

சுழலும் உலகையும் அதைச் சுற்றும் நிலவையும் கண்டுகொண்டிருந்த நட்சத்திரங்கள் சிரித்துக்கொண்டே இருந்தன—ஆமாம்; கேலிச் சிரிப்புதான்! மண்ணுலகை யும் அதை வலம் வரும் வெண்ணிலவையும் பார்க்கப் பார்க்க நட்சத்திரங்களுக்குக் கற்பனை கற்பனையாக எண்ணங்கள் மலர்ந்த வண்ணமிருந்தன. பார்வேந் தனைச் சுற்றும் பாவேந்தன்...... செச்சே...... அரசமரத் தைச் சுற்றும் அழகு மங்கை...... அல்ல அல்ல...... செக்கைச் சுற்றிவரும் சுக்காய் உலர்ந்து போன மாடு... ஆமாம்; இப்படிப்பட்ட கற்பனைகள் நட்சத்திரங்களின் மனதில் பூத்தவண்ண மிருந்தன. அவ்வளவு நட்சத்திரங் களின் உள்ளத்தையும் அப்படியே வெளிப்படுத்துவ

தைப்போல இரண்டு நட்சத்திரங்கள் பேச்சைத் துவக்கின.

ஒன்று வெள்ளி நட்சத்திரம்.

மற்றது மஞ்சள் நட்சத்திரம்.

“எவ்வளவு உயரத்தில் இருக்கிறோம் நாம்! எள்ளத்தனை மதிப்பாவது நம்மிடம் காட்டுகிறதா இந்த வெள்ளி நிலவு?” என்று சற்று வருத்தம் கலந்த சினத்துடன் கேட்டது, மஞ்சள் நட்சத்திரம்.

“மதிப்பா? நிலவா? நமக்குக் காட்டுவதா?” என்று சொல்லிக் கடகட வென்று சிரித்தது, வெள்ளி நட்சத்திரம்.

“பௌர்ணமியில் காய்ந்தது. அதற்குப் பிறகு தேய்ந்து, அமாவாசையில் மாய்ந்துபோகும் அற்ப நிலவின் மதிப்பு நமக்குக் கிடைத்தாலென்ன, கிடைக்காவிட்டாலென்ன? பெரியவர் சிறியவருக்கு வணக்கம் செலுத்தினால் அது சிறியவருக்குப் பெருமை! சிறியவர் பெரியவருக்கு வணக்கம் செலுத்தினால் அப்போதும்சிறியவருக்குத்தான் பெருமை! பெரியவருக்குப் புதுப்பெருமை வந்து சேர்வதில்லை. உருவில் பார்த்தால்—நிலவு ஒரு மணல்துளி — நட்சத்திரமாகிய நாமோ பெருமலை! அப்படியிருக்க, வட்டநிலா நம்மை வணங்கினாலும் பெருமை நமக்கல்ல, நிலவுக்குத்தான்! ஆகவே, நிலவு நம்மை மதித்தாலென்ன?” என்று கண்ணைச் சிமிட்டியவாறு பேசிற்று வெள்ளி நட்சத்திரம்.

“ஆமாம் ஆமாம்! அவன் நிலை என்ன? நம் நிலை என்ன? அவன் உண்டாகாத காலத்திலிருந்தே நாம் உயரத்தில் இருக்கிறோம். உருவத்திலும் பருவத்திலும்

தகுதியிலும் திறமையிலும் நாம்தாம் உயர்ந்தவர்கள், நிலவு ஒரு துண்டுக் காகிதம். நட்சத்திரமாகிய நாமோ கட்டுப் புத்தகம்! துண்டுக் காகிதம் வணக்கம் செலுத்தா விட்டாலென்ன? — கட்டுப் புத்தகத்தின் கௌரவம் குறைந்தாவிடப் போகிறது?'' என்று மஞ்சள் நட்சத்திரம் தனக்குத்தானே தேறுதல் மொழி கூறிக்கொண்டது. ஆனாலும் அதன் மனம் நிறைவு பெறவில்லை.

“அற்ப நிலவுதான்! ஆனால்...'' என்று இழுத்தது மஞ்சள் நட்சத்திரம்.

“ஆனால் என்றால் என்ன நண்பா? அவசியமற்ற ஆனால் என்ற சொல் எதற்கு? அற்பமானதுதான் நிலவு! அதிலென்ன ஐயம்? விஞ்ஞானி, உலகுக்கு விளக்கி யுள்ள உண்மையாயிற்றே இது. நிலவு அற்பமானது தான். நட்சத்திரக் கூட்டமெல்லாம் சேர்ந்து கூட்டம் போட்டு விஞ்ஞானிக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். இல்லை, இல்லை. நட்சத்திரக் கூட்டமெல்லாம் சேர்ந்து ஒரு மாநாடே கூட்டி, அதில் விஞ்ஞானியை வரவழைத்து, இதயம் குளிரக் குளிர வரவேற்பு பாடி, இதழ்கள் சிதறச் சிதற மாலைகள் சூடி, நன்றி அறிவிப்புத் தீர்மானமே நிறைவேற்றி அளிக்கவேண்டும். ஆமாம்! எவ்வளவு பெரிய உண்மையை, எவ்வளவு பெரிய மடமையில் ஆழ்ந்திருந்த மக்களுக்கு எடுத்து விளக்கினார் விஞ்ஞானி! வெள்ளைத் தாமரைபோல் மலர்ந்துள்ள பெரிய நிலவு உண்மையில் சின்னஞ் சிறியது. அந்த வெள்ளைத் தாமரையில் தேன் உண்ணச் சுற்றிப் பறக்கும் வண்டுக் கூட்டம்போல் சிதறிக் கிடக்கும் சின்னஞ்சிறு நட்சத் திரங்கள் உண்மையில் ஒவ்வொன்றும் நிலவைவிட,

ஆயிரம் மடங்கு, லட்சம் மடங்கு, ஏன்—கோடி மடங்கு கூடப் பெரிது என்ற உண்மையை விஞ்ஞானிதான் உலகுக்கு எடுத்து விளக்கினர். நிலவு அற்பமானதுதான். அற்ப நிலவுதான். ஆனல் என்று இழுக்கிருயே நண்பா. ஏன்? ஏன் அந்த ஆனல் போடுகிருய்?'' என்று கம்பீரமாகக் கேட்டது வெள்ளி நட்சத்திரம்.

''அற்ப நிலவுதான்! ஆனல்...... ஆனல்...... மண்ணுலக மக்கள் பெரியவர்களாகிய நம்மை விட்டுவிட்டுச் சிறியவனைத்தான் போற்றுகிருர்கள்'' என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறியது மஞ்சள் நட்சத்திரம்.

''என்ன நண்பா? என்ன நீ சொல்லுகிருய்?'' என்று கலக்கம் நிறைந்த குரலில் கேட்டது வெள்ளி!

''ஆமாம் நண்பா! மண்ணுலகம் பெரிய நட்சத்திரத்தைப் போற்றுவதில்லை; சிறிய நிலவைத்தான் போற்றுகிறது. மாற்ருந்தாய் பிள்ளையைப் போல் நம்மையெல்லாம் எட்டி உதைத்துவிட்டுத் தன் பிள்ளையைப் போல் மண்ணுலகம் நிலவைத்தான் பாராட்டுகிறது — சீராட்டுகிறது. ஆமாம்—மண்ணுலகம் நிலவைத்தான் பாராட்டுகிறது—சீராட்டுகிறது. சகிக்க முடியாத இந்த உண்மையைச் சமாளித்துத்தான் ஆகவேண்டும் நண்பா!'' என்று அழு குரலிலேயே பேசத் தொடங்கியது மஞ்சள்!

''மண்ணுலகிலுள்ள மக்கள்தானே........'' என்று கேலியாகப் பேசியது வெள்ளி. ''நட்சத்திரங்களாகிய நாமெல்லாம் விண்ணுலகில் வாழ்பவர்கள்! விண்ணுலகத்தாராகிய நாம் மண்ணுலக மக்களைப் பற்றி எண்ணுவதை விட்டுத் தள்ளுவோம்'' என்றது வெள்ளி.

“நட்சத்திரங்கள் விண்ணுலகில் வாழ்வது உண்மை தான். ஆனால்......”

“ஆனால்—என்ன ?”

“மண்ணுலகமும் விண்ணுலகில்தான் வாழ்கிறது.”

“என்ன ?”

“அந்தரத்தில் சுற்றிச் சுழலும் பந்தல்லவா மண் ணுலகம்! மண்ணுலகத்திலிருந்து பார்த்தால் நட்சத்திரம் விண்ணுலகில் வாழ்வது தெரியும். நட்சத்திர உலகி லிருந்து பார்த்தால் மண்ணுலகம் விண்ணுலகில் வாழ்வது நன்கு தெரியும். நமக்கெல்லாம் அது நன்கு தெரிகிறதே! மண்ணுலகிலுள்ள மக்களென்றால் என்ன? விண்ணுல கில் சுழலும் மண்ணுலக மக்கள் தாமே அவர்கள்! அப்படிப் பார்த்தால் நம்மைப்போல் அவர்களும் விண் ணுலகத்தார்தாம்! அந்த மக்கள், என் நண்பா, பெரிய நட்சத்திரத்தை மதிக்கவில்லை—சிறிய நிலவைத்தான் மதிக்கிறார்கள், கொண்டாடுகிறார்கள், பாராட்டுகிறார்கள், சீராட்டுகிறார்கள்! ஐயோ......”

“அழாதே நண்பா—அழாதே! உன் அழுகையைப் பார்த்தால் எனக்கும் அழுகை வருகிறது.”

“மக்கள் நிலவுக்குக் கொடுக்கும் மதிப்பு, பாராட்டு, சீராட்டு......”

“என்னதான் அப்படிக் கொடுக்கிறார்கள்?”

“நண்பா! நிலவை மக்கள் மதிப்பது, பாராட்டுவது, சீராட்டுவது உனக்குத் தெரியும். என்றாலும் அதை எண்ணிப் பார்ப்பதுகூட உனக்கு ஏக்கத்தைத் தரும்—துக்கத்தைத் தரும். அதனால்தான் மக்கள் நிலவைப்

பாராட்டுவதை அறிந்தும் அறியாதவன்போல் பேசுகிருய். இல்லையா நண்பா? உண்மை இதுதானே! நமக்குள் என்ன? சொல்—சொல் நண்பா!" என்று மஞ்சள் நட்சத்திரம் சொன்னதும், வெள்ளி நட்சத்திரம் மௌன மாகியது. அதன் கண்ணில் நீர் துளிர்த்தது. மஞ்சள் நட்சத்திரம் பேச்சைத் தொடர்ந்தது.

"மக்கள், நிலவுக்கு அளிக்கும் பெருமை மகத்தா னது. தளர் நடைபோடும் குழந்தையிலிருந்து தடியூன் றித் தள்ளாடி நடக்கும் தாத்தா வரை, ஆண்டியிலிருந்து அரசன் வரை, கதவடைக்கும் கருமியிலிருந்து அள்ளிக் கொடுக்கும் வள்ளல் வரை, பாட்டாளியிலிருந்து பாவா ணன் வரை, இவர்கள் மட்டுமா........? ஒருவனுக்காக வாழும் பத்தினியும், பலரால் வாழும் பரத்தையும், வண் ணத்தையும் எண்ணத்தையும் கலந்து கண்ணுக்குமுன் காட்சியை உருவாக்கும் சித்திரக்காரனும், கல்லுக்கு உருக்கொடுத்து அதில் உயிர் தொடுத்துப் பேச வைத்து அதைக் காணவரும் மனிதர்களைக் கற்சிலைகளாக்கும் சிற்பியும், நாட்டு வரலாற்றைக் கணக்குப் புத்தகமாக்கும் சரித்திரக்காரனும், அதே வரலாற்றைக் கவிதைப் புத்தக மாக்கும் காவியக்காரனும், காலத்தைக் கட்டைவண்டி என்று திட்டிக் கொண்டிருக்கும் சோம்பேறியும், அதே காலத்தைப் பறக்கும் சிட்டு என்று சிறக்கக் கூறும் செய லாளியும், இவர்கள் மட்டுமா...? சூழ்ச்சியை வாளாக்கி வீசும் எத்தனும், அந்த வாள்வீச்சுக்குப் பலியாகும் ஏமா ளியும், எண்ணுவதையெல்லாம் எப்போதும் பேசிக் கொண்டிருக்கும் பித்தனும், எப்போதும் எண்ணத்துட னேயே பேசிக் கொண்டிருக்கும் சித்தனும், உடலை மறக்

கச் செய்து உள்ளத்தை உவகை உலகில் பறக்கவைக்கும் கலைஞனும், உள்ளத்தைத் துறந்துவிட்டு உயிரைப் பறக்கவைக்கும் கொலைஞனும்......பலபடக் கூறுவானேன்...கண் படைத்தோர் எல்லோரும் விண் படைத்த வெள்ளி நிலவுக்கு அள்ளிக் கொடுக்கும் பெருமை அளவிட முடியாதது—ஆம்மாம் ; அளவிட முடியாதது !

"......உவமை கூறுவோர் சொல்லைக் கவனித்தால் உண்மை புரியும். நிலவில்லாத நீலவானம்போல் என் பார்களே தவிர, விண்மீன் இல்லாத விரிந்தவானம் என்று சொல்லக் கேட்பதில்லை. பெருமை யாருக்கு? நட்சத்திரத்துக்கல்ல—நிலவுக்குத்தான் !

"......சித்திரப்பாவைபோல் நின்று சித்தங் கவர்ந்த சிங்காரியிடம் தித்திக்கும் முத்தமிழ் காதல்மொழி பேசும் கட்டிளங்காளை, "நீள் விழியே! உன்முகம் நிலவுதான்!', என்று கூறும்போது, சிறப்பு நட்சத்திரத்துக்கல்ல, நிலவுக்குத்தான் கிடைக்கிறது ! அன்னை அமுதை ஊட்டும் போது, அதோடு அன்பையும் அழகு தமிழையும் கலந்து ஊட்டும்போது, அவற்றையெல்லாம் விலக்கிவிட்டு அடம் பிடிக்கும் சிறுவன், " அம்மா ! அந்த நிலவை எனக்குப் பிடித்துத்தா !'' என்றுதான் கேட்கிறான். நட்சத்திரத்தைப் பிடித்துத்தா—நான் அதோடு விளையாட வேண்டும் என்று கேட்பதில்லை. பெருமை யாருக்கு? நட்சத்திரத்துக்கல்ல, நிலவுக்குத்தான் ! கதாசிரியர்கள் தாங்கள் படைக்கும் காதலர்களை நிலவுவீசும் இரவுக்கு நிச்சயமாக இழுத்துவந்த பிறகுதான் நிம்மதியடைகிறார்கள். திரையில் காவியம் வரையும் ஓவியர்கள் பரந்த வானத்தில் பவனி புறப்படும் பால்நிலவைப் பலவேறு நிலையில் தீட்

டிய பின்னர்தான் திருப்தி யடைகிருர்கள். கவிவாணர்களோ விண்ணில் கிளம்பும் வெண்ணிலாவைக்கண்ணல் கண்ட பிறகு தான் கவிதையே ஊற்றெடுக்கிறது என்கிருர்கள். அன்புடை நெஞ்சம் கலந்த பண்புடைக் காதலர்கள் தங்கள் காதலுக்குச் சாட்சியாக உயர்ந்த வானத்தில் உலாவும் நிலாவைத்தான் நிறுத்துகிருர்கள். இலட்சியத்தின் வெற்றியில் இதயத்தைப் பதித்துவிட்ட செயல் வீரர்கள், மண்டிவரும் இருளில் மலரும் நிலாவைக்கண்டு தான் மாண்டுவரும் நம்பிக்கையை மீண்டும் மலரச் செய்து கொள்ளுகிருர்கள். துயரச் சுவைக்கு உயர்ந்த சிகரமாம் பாரிமகளிர் தாம் பாடிய பாட்டில் “அற்றைத் திங்கள் அவ் வெண்ணிலவில்” என்று நிலவுக்குத்தான் அழியாத பெருமை தந்துள்ளனர்.

“முழுமை நிலா அழகு நிலா முளைத்தது விண் மேலே--அழுத முகஞ் சிரித்ததுபோல்—அல்லி விரிந்தாற் போல்” என்று கவியரசர் பாரதிதாசன் வானத்தைப் பார்த்ததும் நிலவைத்தான் பாடுகிருர்! அதுமட்டுமா? “நிலவே! நீ, முன் நடந்ததைக் கூறுவாய்—மெய்யாய்க் கூறுவாய்! இலகு செந்தமிழையும் உன்னையும் கூட்டி இயற்கை அன்னை வளர்த்திலேயோ பாலூட்டி?” என்று நட்சத்திரத்தோடு அல்ல, நிலவோடுதான் புரட்சிக் கவிஞர் பேசுகிருர். வான்புகழ் வள்ளுவர்கூட நலம்புனைந் துரைக்கும் அதிகாரத்தில் நிலவின் எழிலேத்தான் பெரிதாய்க் கூறுகிருர். நட்சத்திரத்தைப் பற்றியும் வள்ளுவர் கூறுகிருர். என்ருலும், அதனுல் நட்சத்திரங்களுக்குப் பெருமையல்ல, சிறுமைதான் கிடைக்கிறது. மண்ணிலுள்ள பெண்ணின் முகத்தையும் விண்ணிலுள்ள வெண்ணிலவையும் பார்த்து, “பெண்ணின் முகம் எது?—

வெண்ணிலவு எது?'' என்று தங்களால் வேறுபாடு தெரிந்துகொள்ள முடியாததால்தான் நட்சத்திரங்கள் கலங்கின என்று வள்ளுவர்கூறும்போது, நட்சத்திரங்கள் வேறு பாட்டுணர்வு தெரியாத முட்டாள்களாகின்றன! அந்தோ.....மக்கள் நிலவுக்கு அளிக்கும் பெருமை மகத்தானது—மகத்தானது!'' என்று மஞ்சள் நட்சத்திரம், குற்றாலத்து நீர் வீழ்ச்சியைப் போல் குபுகுபுவென்று பொழிந்து கொண்டிருந்தது!...'' போதும்—போதும்!'' என்று வெள்ளை நட்சத்திரம் கையால் தன் இருசெவிகளை யும் பொத்திக்கொண்டு கத்தியது! மஞ்சள் நட்சத்திரம் திடீரென்று பேச்சை நிறுத்தி மௌனமாகியது.

மண்ணுலக மக்கள் நிலவுக்கு ஏன்தான் இவ்வளவு மதிப்பு தருகிறார்கள் என்று எண்ணி, மஞ்சளும் வெள்ளி யும் மண்டையை உடைத்துக் கொண்டன. எண்ணி எண்ணி இறுதியில் இரண்டு நட்சத்திரங்களும் ஒரு முடி வுக்கு வந்து சேர்ந்தன. மண்ணுலகிற்கே சென்று மக்க ளிடையே உலவி, நிலவுக்கு அளிக்கும் பெருமை எதனால் வருகிறது என்பதை ஆராய்ந்து உணரவேண்டும் என்று மஞ்சளும் வெள்ளியும் முடிவுசெய்தன. முடிவு செய்து விட்டால் போதுமா? திட்டத்தைச் செயலுருவாக்கு வதற்கு எண்ணி எண்ணி மீண்டும் ஒரு திட்டம் போட் டன. கணநேரம்தான்—திடீரென்று மஞ்சளும் வெள்ளி யும் உருவில் குறைந்துகொண்டே வந்து இறுதியில் இரு மின்மினிகளாயின. அந்த மின்மினிகளும் திடீரென்று அவ்விடத்தில் மறைந்துபோயின! ஆமாம், அவை மண்ணுலகத்திற்குப் போய்விட்டன—நிலவுக்குக் கிடைக் கும் மதிப்பின் மூலத்தை ஆராய்வதற்கு அவை மண்ணு லகம் போய்விட்டன.

மண்ணுலகத்திலே......

அகன்று விரிந்த வீதியைப்போல் வெண்மலர் விரிந்த ஆறு படுத்துக்கிடந்தது. தண்ணீர் வற்றிய—வெண் மணல் விரிந்த அந்த ஆற்றில் சின்னஞ்சிறு கூட்டங் கூட்டமாக மக்கள் கூடியிருந்தனர்; பந்தி பந்தியாகக் குந்தியிருந்தனர்! பாடிவரும் நிலவு விண்ணில் உலவிக் கொண்டிருந்தது. ஓடிவரும் தென்றல் மண்ணில் ஆற்றில் கூடியிருந்த மக்கள் உடலோடு குலவிக் கொண்டிருந்தது. கூடியிருந்த அந்த மக்கள், ஆம்—நிலாச்சாப்பாடு சாப்பிடவே அங்கு வந்திருந்தனர். சாப்பாடு தொடங்கியது.

இரு மின்மினிகள் அந்தக் கூட்டத்தில் அவர்கள் தலைக்கு உயரே சுற்றிச் சுற்றிப் பறந்து கொண்டிருந்தன.

"அடடா! அருமையான சாப்பாடு. அருமையான சாப்பாடு!" என்று ஒருவன் சொன்னான். பேசிக் கொண்டே அவன் சாப்பிட்டான். சாப்பிட்டுக் கொண்டே அவன் பேசினான். "இதைச் சமைத்தவர் கைக்குச் சந்தனம்தான் பூசவேண்டும். என்ன அருமை! சாப்பாடு என்ன அருமை!" என்று பூரித்துப் போனான் அவன். பக்கத்திலிருந்தவன் உடனே பளிச்சென்று பதிலளித்தான்: "அருமை, சாப்பாட்டில் இல்லையடா, சாப்பாட்டில் இல்லை அருமை! இலையிலிருக்கும் சாப்பாட்டின் அருமை இந்த இடத்தில்தான் இருக்கிறது. சாப்பாட்டின் சுவை, சமையற்காரனுடைய திறமையால் அல்ல, வானத்துச் சந்திரனின் அருமையால்தான்! இது நிலாச் சாப்பாடு அப்பனே! தெரிகிறதா?" என்று சொல்லிச் சிரித்தான் அவன். எல்லோரும் கடகடவென்று சிரித்து அந்தப் பதிலை ஒத்துக்கொண்டனர்.

"அதனால்தான் நிலவைப் போற்றுவோம்; நிலவைப் போற்றுவோம் என்று இளங்கோவடிகள் பாடினார்!" என்று அப்பளத்தைக் கடித்துக்கொண்டே ஒரு சிலம்புச் செல்வர் சொல்லிவிட்டுச் சிரித்தார்.

இந்தப் பேச்சையெல்லாம் இதுவரை கேட்டுக் கொண்டிருந்த அந்த இரண்டு மின்மினிகளும் அவ்விடம் விட்டு விரைவாகப் பறந்து சென்றன.

இரு மின்மினிகளும் சிறிது தொலைவு வந்ததும் ஓர் இடத்தில் திடீரென்று நின்றன. சில இரட்டை மாட்டு வண்டிகளைச் சில மனிதர்கள் பூட்டிக் கொண்டிருந்தனர். "நிலவு கிளம்பி நெடுநேரம் ஆயிடுச்சப்பா—இப்போ வண்டியைக் கிளப்பினால்தான் விடிய விடிய ஊர்போய்ச் சேரலாம். உம்—சீக்கிரம்!" என்று ஒருவன் வண்டியைப் பூட்டிக் கொண்டே அடுத்த வண்டியைப் பூட்டிக் கொண்டிருப்பவனைப் பார்த்துச் சொன்னான்.

சிறிது நேரத்தில் மாடுகளின் கால்கள் இடம் விட்டுப் பெயர்ந்தன—சக்கரங்கள் உருளத் தொடங்கின. எல்லா வண்டிகளும் கிளம்பி விட்டன. மாடுகளின் கழுத்திலிருந்த சலங்கைகளிலிருந்து 'கலகல' நாதம் உதிரத் தொடங்கியது. வண்டிக்காரர்களின் நாவிலிருந்து தெம்மாங்கே கிளம்பியது! "நிலாவுக்கு ஒரு கும்பிடு போடனும் அண்ணேன்! இந்த நிலா இல்லாவிட்டா நாமெல்லாம் வண்டியிலே இராப்பயணம் தொடங்கியிருக்க முடியுமா? அருமையான நிலா அழகான நிலா!" என்று மாட்டை ஒரு கையால் தட்டி விட்டுக்கொண்டே கூறினான். அதுவரை அங்கு சுற்றிக் கொண்டிருந்த மின்மினிகள் வேறிடம் நோக்கிப் பறந்தன.

இரவு மேய்ச்சலுக்காக ஒரு சின்னஞ்சிறு மாட்டு மந்தையை இரண்டு மூன்றுபேர் ஓட்டிச் சென்றுகொண் டிருந்தனர். குதிப்பும் பாட்டுமாக அவர்கள் போய்க் கொண்டிருந்தனர். மின்மினிகள் அவர்களையும் தொடர்ந்தன.

வானத்தில் நிலவு ஊர்ந்து கொண்டிருந்தது. திறந்த வயல் வெளியில் சிறந்த அரங்கு ஒன்றில் கூத்து—அல்ல அல்ல—உயர்ந்த நாடகமொன்று நடந்துகொண் டிருந்தது. வயல் வெளி நிறைய மக்களும், மக்கள் நிறைய மகிழ்ச்சியும் பொங்கி வழியக் கண்ட மின்மினிகள் இரண்டும் அங்கேயும் சற்று நேரம் சுற்றிவந்தன.

வேறொரு இடத்தில் வீட்டின் முன்புறம் நின்று கொண்டு தங்கச் சிலைபோன்ற தாய் ஒருத்தித் தந்தச்சிலை போன்ற குழந்தையை இடுப்பில் வைத்துக்கொண்டு அதற்கு, வெள்ளிக் கிண்ணத்திலிருந்து பால் சோற்றை வானத்திலிருந்த பால் நிலாவைக் காட்டிய வண்ணம், ஊட்டிக்கொண்டிருந்தாள். அந்த இரண்டு மின்மினி களும் அங்கேயும் சற்று நேரம் சுற்றி வந்தன.

இன்னொரு இடத்தில் நிலவில் படகில் — காதலர் உலவிக்கொண் டிருந்தனர். மற்றொரு இடத்தில் தெருத் திண்ணையில் பெரியவர்கள் அரட்டை யடித்துக்கொண் டிருந்தனர். வீதியில் நிலவொளியில் சிறுவர்கள் விளை யாடிக்கொண் டிருந்தனர். அங்கெல்லாம் அந்த இரண்டு மின்மினிகளும் சுற்றி வந்தன; அவர்கள் நில வைப் பற்றிப் பேசியதை யெல்லாம் உற்றுக் கேட்டன. அது மட்டுமா? கடற்கரையில் நிலவில் உலவ வந்தவர் கள், சோலையில் மகிழ்ந்திருக்கக் கூடியவர்கள், புன்செய்

நிலத்தில் ஏர் செலுத்தும் உழவர்கள், ஏற்றம் இறைக்கும் மனிதர்கள் எல்லாருடைய பக்கங்களிலும் அந்த மின் மினிகள் இரண்டும் சுற்றிப் பறந்தன. நிலவின் உல கிலே எங்கெங்கே மனிதர்கள் கூடியிருந்தாலும், எத் தகைய செயலிலே அவர்கள் ஈடுபட்டிருந்தாலும், அங்கங்கெல்லாம் அவர்களைச் சுற்றிப் பறந்தன அந்த மின்மினிகள்; நிலவைப் பற்றி அவர்கள் பேசியதெல் லாம் உற்றுக் கேட்டன.

இறுதியில்.........

இரண்டு மின்மினிகளும் ஒன்றையொன்று பார்த்துக் கொண்டன. "நிலவின் புகழுக்குக் காரணமென்ன என்பது புரிகிறது" என்பதை அவற்றின், பார்வை ஒன்று மற்றொன்றுக்குப் புரிய வைத்தது. விடுவிடு வென்று அந்த மின்மினிகள் இரண்டும் உயரே பறந்தன —கணநேரத்தில் மறைந்தன! வானத்தில் காலியாக இருந்த அந்த இரண்டு இடங்களிலும் மஞ்சள் நட்சத்திர மும் வெள்ளி நட்சத்திரமும் வந்து தோன்றி, "அப்பாடா! மண்ணுலகப் பயணம் முடிந்தது. எண்ணத்தில் இருந்த இருள் விடிந்தது!" என்று ஒரே குரலில் சொல்லிப் பெருமூச்சு விட்டன.

"நண்பா! மண்ணுலக மக்கள் சிறிய நிலவைப் போற்றுகிறார்கள். பெரிய நட்சத்திரத்தைப் போற்றுவ தில்லை. காரணம் புரிந்ததா?" என்றது வெள்ளி! மஞ்சள், சஞ்சலத்தோடு உண்மையைச் சொல்லியது.

"அலைகடலில் மலரும் கதிரவன் மலைவாயிலில் விழுந்து மறைந்த பிறகு மண்ணுலகில் இருள் மண்டி விடுகிறது. மக்கள் திண்டாடுகிறார்கள். மலர்கிறது

நிலா! கலைகிறது காரிருள்! மக்கள் கொண்டாடுகிறார்கள் நிலவை! இப்படி ஒரு சிறுவன் படித்துக் கொண்டிருந் தானே—இதுதான் உண்மை!'' இதைக் கேட்ட வெள்ளி இறுதியாகப் பேசிற்று.

ஆயிரக்கணக்கான நட்சத்திரங்கள் கூடினாலும் உலகத்தின் இருள் விலகுவதில்லை. ஆனால் ஒரே ஒரு நிலவு எழுந்தால் போதும்; ஓடி ஒளிகிறது இருள்—ஒளி யில் குளிக்கிறது உலகு! நிலவின் ஒளி—சொந்தமாக இல்லாவிட்டாலும் இரவலாக இருந்தாலும், பாருக்குப் பயன் தருகிறது—பரவசம் தருகிறது—எனவே பாராட்டு கிடைக்கிறது! பெரிய நட்சத்திரத்தை விட்டு விட்டுச் சிறிய நிலவை மக்கள் போற்றுவதன் உண்மை இது தான்!........''

வெள்ளி திடீரென்று பேச்சை நிறுத்தியது. மண் ணுலகிலிருந்து ஓர் இனிய இசை காற்றில் வந்துகொண் டிருந்தது. இரண்டு நட்சத்திரங்களும் இமையடித்துக் கொண்டே அந்தப் பாட்டைக் கூர்ந்து கேட்டன.

''முழுமை நிலா அழகு நிலா
முளைத்தது விண்மேலே
அழுதமுகஞ் சிரித்ததுபோல்
அல்லி விரிந்தாற்போல்!......''

# மானும் மயிலும்

மழைத்துளிகள் சரசரவென விழத் தொடங்கியதும் தெருவில் போகும் மக்களிடையே மலரும் பரபரப்பைப் போல் சிறுவர்கள் பரபரப்படைந்தனர் !

நடந்தனர்.

பெருநடை போட்டனர்.

ஓட்டமாக ஓடினர் !

தீப்பிடித்து எரியும் வீட்டைச் சுற்றி ஒரு நொடியில் வந்து குவியும் கூட்டத்தைப்போல் சிறுவர் கூட்டம் ஒரே கூட்டமாகக் கூடியது !

' ஆகா — ஊகு ' என்று ஆரவாரம் செய்தனர்.

' சபாஷ் பலே !' என்று கூச்சல்கள் கிளம்பின.

"ஆற்றுப்பாலத்தில் புகைவண்டி செல்லும்போது உண்டாகும் கடகட ஒலியைப்போல் சிறுவர்களின் கை தட்டல் ஒலி இடை இடையே கேட்டது ! அவ்வளவு மகிழ்ச்சி — அவ்வளவு பாராட்டு!"

கூட்டத்தின் உள்ளே அப்படி என்னதான் நடக் கிறது ?

புதிதாக ஓடிவரும் சிறுவர்கள் புரிந்துகொள்ள விரும்பினர்.

மலரும் நிலையில் இருக்கும் தாமரை மொட்டின் இதழ்களைத் தள்ளி விலகிக்கொண்டு உள்ளே நுழையும் தேன் வண்டைப்போல், கூட்டத்தில் நின்ற சிறுவர்களை விலகிக்கொண்டு உள்ளே நுழைந்தனர் சிறுவர்கள் !

"அது என்ன ?..." ஒருவன் இன்னொருவனைக் கேட்டான் !

"ஆட்டம்—ஆட்டமடா ஆட்டம் !"—பதில் உடனே கிடைத்தது.

"என்ன ஆட்டம் ?"

"மயில் ஆட்டம் !

"இதோ ஆடுவது மயிலா ?"

"ஆமாம் ! மயில்தான் !!"

"மயில் என்று எப்படித் தெரிந்தது ?"

"அட சீ ! இது தெரியாதா ? மயில் ஒரு பறவை ! எதிரே ஆடுவதும் ஒரு பறவை ! இதனால் தெரியவில்லையா ?"

உண்மையிலே இது மயில்தானா ?

"அட பைத்தியமே ! இதுகூடவா உனக்குத் தெரியவில்லை? இரண்டு கால்—ஓர் அலகு—விரிக்கும் தோகை—இவ்வளவும் மயிலுக்கு உண்டு. இதோ ஆடுகின்ற பறவைக்கு அவ்வளவும் உண்டு. ஆகையினால் இது மயில் என்று இன்னமுமா தெரியவில்லை ?"

'ஓகோ—அப்படியா' என்று வாய் பிளந்தான் கேட்டவன்!

"இது மட்டுமா? இன்னும் கேளப்பா! இதோ ஆடு கிற மயிலே சொல்லுகிறது, தான் ஒரு மயில் என்று—போதாதா நம்புவதற்கு?"

"ஆமாம்! மயில்தான்—அழகு மயில்—ஆடுகிறது மயில்—ஆமாம் மயில்தான் ஆடுவது"—என்று பெருங் கூச்சலிட்டான் ஐயம் தெளிந்த சிறுவன்.

மயில் ஆடிக்கொண்டிருந்தது.

கால்மாறி ஆடியது.

தோகை விரித்தாடியது.

நெருப்பை ஒத்த நிறங்கொண்ட தொங்கும் தாடை யுடன் கழுத்தை இங்குமங்கும் அசைத்து ஆடியது.

சீன வெடிக்கட்டுகளைக் கொளுத்திப் போட்டது போல் சிறுவர்களின் கைதட்டல் ஒலித்தது. அவ்வளவு பாராட்டு! அவ்வளவு மகிழ்ச்சி!

மயிலை அப்பொழுதுதான் அவர்கள் பார்க்கிறார்கள். மயிலின் ஆட்டத்தை அப்பொழுதுதான் அவர்கள் பார்க் கிறார்கள். இருக்காதா மகிழ்ச்சி!

இன்று ஆட்டம் அவ்வளவுதான் என்று கழுத்தை வளைத்து அலகால் தரையைக் கொத்துவதுபோல் வணங்கி நின்றது மயில்!

ஒரு பைசா—காலணா—அரையணா...மயிலின் பாதத் தில் சிறு குன்றைப்போல் சிறுவர்கள் வீசியெறிந்த சில் லறை நாணயங்கள் குவிந்தன!

மயில் அவ்வளவு நாணயங்களையும் சுருட்டிக் கொண்டு மறைந்தது !

மறுநாள் இன்னொரு இடத்தில் மயிலின் ஆட்டம்—அதேபோல் சிறுவர்கள் கூட்டம் இறுதியில் மயிலுக்குக் கொண்டாட்டாம் !

நாள் ஓடிக்கொண்டிருந்தது.

அந்த மயில் ஆடிக்கொண்டே இருந்தது.

ஒரு நாள்—ஓர் இடத்தில்—அந்த ஒய்யார மயில் ஆடிக்கொண்டிருந்தது ஓகோகோ என்று கூட்டம் கூடிக் கிடந்தது—சிறுவர்கள் கூட்டம்தான் !

புள்ளிமான் குட்டியைத் தோளில் தூக்கிக்கொண்டு எங்கிருந்தோ ஒரு வேடுவச் சிறுவன் அந்தக் கூட்டத்தில் புகுந்தான் !

மயில் ஆடிக்கொண்டிருந்தது !

"நெளியும் வானவில் - துடிக்கும் பட்டுப்பூச்சி... எல்லாம் இந்த மயிலின் ஆட்டத்தில்" என்றெல்லாம் பாராட்டி வியந்துகொண்டிருந்தனர்.

"ஐயய்யே...இது மயிலல்ல—இது மயிலே அல்ல!" என்று கூச்சலிட்டுக் கூறினன் வேடுவச் சிறுவன். அவன் கூச்சலைப் பக்கத்தில் உள்ள ஒருவர் இருவர் தவிர எவரும் பொருட்படுத்தவில்லை.

மயில் ஆடிக்கொண்டிருந்த இடத்துக்கு அருகே நெருங்கிக் கூட்டத்தைப் பார்த்து "இது மயில் அல்ல—மயில் இது அல்ல" என்று கூவிக் கூவிக் கூறினன்.

கூட்டத்தின் கருத்து அவன்மீது திரும்பியது !

மயில் தன் ஆட்டத்தை நிறுத்தியது. கேலியாக "முட்டாள் இவன்!" என்று வேடுவச் சிறுவனை அல கால் நீட்டிக் காட்டிக் கூறிவிட்டுக் குறுநகை புரிந்தது.

கூட்டத்திலிருந்த ஒரு சிறுவன் ஒரு சிறு கல்லை யெடுத்து வேடுவச் சிறுவன் மீது வீசினான்.

மயில் பாதுகாப்பான இடத்துக்கு வந்துவிட்டது.

ஒரு கல் பறந்தது.....அதைத் தொடர்ந்து இன்னொன்று!...சிறுவன் உடலில் காயம்பட்டது—மண்டை உடைந்தது—கல் பறந்துகொண்டே இருந்தது. அவன் கீழே விழுந்தான். அவன் கண்விழித்துப் பார்க்கும்போது அவன்மேல் மூடியிருந்த கற்குவியலை அவனுடைய புள்ளி மான் குட்டி தன் கால்களால் விலக்கிக் கொண்டிருந்தது - கனிவோடு அவன் காயத்தைத் தன்னுடைய நாக்கால் தடவிக்கொண்டிருந்தது. நெடுநேரமாகியிருந்தது. கூட்டமெல்லாம் அடியோடு மறைந்து நெடுநேரம் கடந்திருந்தது.

சிறுவன் மானின் கழுத்தைப் பிடித்துக்கொண்டு மெல்ல எழுந்தான்.

" இருக்கட்டும்! நாளைக்கு ஆட்டம் நடக்கும் இடத்தில் கூரான கல்லை அம்புபோல் வீசி அந்தப் போலி மயிலை மூளியாக்குகிறேன்—மோசப் பறவையின் வேஷத்தைக் கலைக்கிறேன்!" என்று கதறினான் வேடுவச் சிறுவன்.

சிறுமான் சிரித்தது.

வேடுவச் சிறுவன் சீறினான்.

மீண்டும் அந்த மான் சிரித்தது—அவன் காதருகே சென்று ஏதோ சொல்லிற்று! அவன் சிரிப்பு மறைந்தது சிந்தனை மலர்ந்தது!

மறுநாள் விட்ட இடத்திலிருந்து முதல்நாள் ஆடிய மயிலின் ஆட்டம் தொடர்ந்தது—முதல் நாளைவிடப்பெருங் கூட்டம் அடர்ந்தது !

திடீரென்று மயில் ஆடிக்கொண்டிருந்த இடத்தில் அதனருகே இன்னொரு பறவையைக் கொண்டு வந்து விட்டான் வேடுவச் சிறுவன் ! வேடுவச் சிறுவன் விடுத்த பறவை தோகை விரித்தது. அந்தத் தோகையிலே பொன் நாணயங்கள் மின்னின—இரத்தினங்கள் பள பளத்தன—வைரங்கள் ஒளிவிட்டன !

வேடுவச் சிறுவன் விடுத்த பறவை கழுத்தை அசைத்தது. வானவில்லே உருகி அதிலிருந்து வழிந்தது !

சிறுவர்கள் புதுப் பறவையின் தோற்றத்தைக் கண்டு வியந்து வினாக்குறியாக நின்றனர். இது என்ன பறவை? கூட்டத்தில் ஒவ்வொரு சிறுவனும் இதையே கேட்டான். அரை நொடிக்குள் உண்மை பரவியது. இதுவரை ஆடி யது வானகோழி ! இப்போது வந்து நிற்பதுதான் மயில் ! இந்த உண்மை ஒவ்வொரு சிறுவனுக்கும் விளக்கமா யிற்று !

வான்கோழியை நோக்கி ஒரு கல் பறந்தது ! அவ் வளவுதான், மறு கல் இன்னொரு கல்...தொடர்ந்து பல கற்கள் ! கலைந்து சென்ற சிறுவர் கூட்டத்தில் ஒவ்வொரு வனும் சிரித்துக்கொண்டே சென்றான் ; காரணம் ஒவ் வொருவனும் வான்கோழியின் பிய்த்த இறகைக்கையிலே வைத்திருந்ததுதான் !

இன்னொரு திக்கில் வேடுவச் சிறுவன் பெருமகிழ்ச்சி யோடு மானைப் பார்த்து " உண்மை புரிந்தது ! **வான்**

**கோழியை விரட்டும் வழி—கல்லை எடுப்பதல்ல, கலாப மயிலை விடுப்பதுதான்!''** என்று பூரிப்போடு கூறிப் புன்னகை புரிந்தான்! “மானுக்குத்தானே தெரியும் மயிலின் அருமை—அதனால்தான்...” என்று சொல்லிவிட்டுச் சிரித்தது அந்தப் பொல்லாத புள்ளிமான்! தொலைவில்—வேறொரு திக்கில், முட்டையிலிருந்து வெளிவந்த குஞ்சின் தோற்றத்தில் இறக்கைகள் பிய்ந்து—இறகுகளை எல்லாம் பறிகொடுத்த வான்கோழி நொண்டி நொண்டித் தள்ளாடி நடந்துகொண்டிருந்தது! அதன் கண்கள் இரு துளிக் கண்ணீரைச் சொரிந்தன!

# மேகங்கள்

பார்வையைப் பெரிதாக்கும் வானம் முழுதும் நீலப் போர்வை. நீலப் போர்வை யணிந்த அந்த வானத்திலே மேகங்கள் சில மிதந்துகொண்டிருந்தன. இல்லை இல்லை......! ஊர்வலத்தில் மோகனமான கல்யாணப் பெண் தன் கட்டை விரலிலே கண்களையும் கட்டவிழ்ந்து போன மகிழ்ச்சியிலே கருத்தையும் பதித்து நளினமாக அடியெடுத்து வைத்து நடந்து போவதுபோல அந்த மேகங்கள் மெதுவாக, ஊர்ந்துகொண்டிருந்தன.

கீழே—

மலை மலையாய் எழுந்த பேரலைகள் கடலிலிருந்து கிளம்பி கரையிலிருந்த பாறைகளில் மோதி ஓவென்று கூச்சலிட்டுக் கொண்டிருந்தன.

பாறைகளில் கொஞ்ச தூரத்தில் சில பச்சை மரங்கள் குடைகளை விரித்ததுபோல் நின்றுகொண்டிருந்தன.

ஒரு கிளையில் இரண்டு வெண்புருக்கள்.

ஒன்று பெண் புரு.

மற்றது ஆண் புரு.

படமெடுத்த நாகம் பின்புறமாகச் சாய்ந்து முன்புறமாக நெளிவதுபோல் கழுத்தை அசைத்து அந்த வெண்

புருக்கள் இரண்டும் பேசிக்கொண்டிருந்தன. பெண் புரு ஆண் புருவைப் பார்த்துக் கேட்டது.

"இந்த அலைகள் ஏன் இப்படித் துடிக்கின்றன?"

ஆண்புரு அதற்குப் பதில் சொல்லியது.

"விடுதலையான புருவைப் பார்த்தால் கூண்டில் சிறைப்பட்ட புரு கூக்குரலிடத்தானே செய்யும்?"

இந்தப் பதில் பெண் புருவுக்குப் புரியவில்லை. ஆண் புரு சிரித்துக்கொண்டே விளக்கியது.

"மேலே மேகங்களைப் பார்! கடல் என்பது கூண்டு. கடற் கூண்டிலிருந்து மேகங்கள் விடுதலை அடைந்துவிட்விட்டன. அதனால்தான் அதைப் பார்த்ததும் இன்னும் கூண்டில் அடைபட்டுக் கிடக்கும் அலைகள் கூச்சலிட்டுத் துடிக்கின்றன!"

பெண்புரு 'களுக்'கென்று சிரித்தது. ஆண்புருவிடமிருந்த சிரிப்பு மறைந்தது. பெண்புரு பேசியது.

"அப்படியானால் நான் கேள்விப்பட்டது பொய் தான்!"

"என்னதான் நீ கேள்விப்பட்டாய்?"

"வானம் ஓர் எஜமான். காற்று தோட்டக்காரன். கடல் ஒரு குளம். மேகம் என்பது பூவாளி. உலகம் ஒரு பூச்செடி!... தோட்டக்காரன், எஜமானன் உத்தரவுப்படி குளத்தில் தண்ணீர் மொண்டு, பூச்செடிக்குப் பூவாளியால் ஊற்றுகிறான். மனிதர்கள் இதை மழை என்கிறார்கள். ஆகவே, மேகங்கள் என்பவை பறக்கும் பூவாளிகள்!"

“இது வெறுங் கற்பனை!”

“நீங்கள் சொல்லியதோ கதை!”

“கதையில் கற்பனை உண்டு. கற்பனையே ஒரு கதைதான். ஆகவே இரண்டும் சரிதான்!”...

இப்போது பெண்புருவுக்கு ஒரு எண்ணம் தோன்றியது. “மேகங்களிடமே சென்று பேச்சுக் கொடுப்போமே. தங்களைப்பற்றி அவை என்ன சொல்லுகின்றன என்று கேட்டால் என்ன?” என்று பெண்புரு கேட்டது. சாரங்கதரன் காலத்திலிருந்து புரு உலகில் கொடி கட்டிப் பறக்கும் அந்தப் பாட்டு—அதன் ஓரடியை ஆண் புரு சிரித்துச்கொண்டே முணு முணுத்தது.

“மேகமண்டலம் தாண்டிப் பறக்கும் என் வெண் புருவே...” இந்தப் பாட்டடியைக் கேட்டுப் பெண்புரு ‘களுக்’கென்று சிரித்தது. பிறகு படபடவென்று இறக்கைகள் அடித்துக் கொண்டன. மடமடவென்று புருக்கள் இரண்டும் உயரே கிளம்பி மறையத் தொடங்கின.

மெதுவாய் வீசிக்கொண்டிருந்த மென்காற்றில் மேகங்கள் நகர்ந்து கொண்டிருந்தன. அவைகளின் வேகத்திலேயே அருகில் அந்த வெண்புருக்களும் பறந்து கொண்டிருந்தன. பெண்புரு தன் அலகைத் திறந்து அழகாகக் கேட்டது.

“எழில் மேகங்களே! எங்கே நீங்கள் போகிறீர்கள்?” தங்களை விசாரிப்பவைகளைப் பார்த்தன மேகங்கள். பொங்கியெழுந்த சந்தோஷத்தாலோ, சஞ்சலத்தாலோ அந்த மேகங்கள் விரிந்து விசாலமாயின. மூச்சை அடக்கிப் பேச்சைத் தொடங்கியது மேகம்.

"எங்கேயும் போகவில்லை—இங்கு மங்கும் அலை கிருேம்?"

"ஏன்?"

"பிறப்பிக்கப் பெற்ருேம்—ஆகையால்!"

"என்ன என்ன? இன்ெருரு தடவை சொல் லுங்கள்."

"அது ஒரு காதல் காவியம்......"

"சொல்லோவிய மாக்குங்களேன்—கேட்போம்!"

"கேளுங்கள்! குதிக்கும் நீருக்கும் கொதிக்கும் நெருப்புக்கும் காதல் பிறந்தது. அருகே வராமலே அணைத்து மகிழவேண்டும். தொட்டு விடாமலே கட்டிப் பிடிக்கவேண்டும். இப்படி இந்த இரண்டு பேருக்கும் ஆசை. ஆனல்......? இவர்களுக்கு இடையிலோ லட்சோபலட்சம் மைல்கள், தூரம்! விடுகதை யல்ல இது; விசித்திரமான கற்பனையுமல்ல. நெடுநாளாய் நடந்து வரும் வேடிக்கை!"

"நகரும் மேகங்களே, நகைப்புதான் வருகிறது எங் களுக்கு! நடந்ததா அவர்களின் ஆசை?"

"ஆசை நிறைவேறுவது மட்டுமல்ல—ஓசைப்படா மல் குழந்தைகளும் பிறந்துகொண்டிருக்கின்றன, அந்தக் காதலர்களுக்கு!"

"நம்ப முடியாதது!"

"எங்களை நீங்கள் நம்ப முடிகிறததல்லவா?"

"எதிரே உங்களைப் பார்க்கிருேமே—எப்படி நம்பா மல் இருப்பது?"

"அப்படியானல் நாங்கள் சொன்னதையும் நம்ப வேண்டியதுதான்."

"எப்படி?"

"அந்தக் காதலர்களின் குழந்தைகள் வேறு யாவரு மல்ல, மேகங்களாகிய நாங்கள்தாம்!... இங்கே, கீழே குதிக்கும் அலைகளையுடைய கடல்தான் எங்கள் தாய்! அங்கே எவ்வளவோ உயரத்தில் இருந்து கொதிக்கும் சூரியன்தான் எங்கள் தந்தை! பிறந்ததுமே விரட்டி யடித்த தாய்—மறந்தும் தன்னிடம் அழைத்து ஆறுதல் சொல்லாத தந்தை......!"

"விசித்திரமான பெற்றோர்களுக்கு விநோதமான பிள்ளைகள்."

"விபரீதமான தொல்லைகள்—என்று சேர்த்துச் சொல் வெண்புருவே—சேர்த்துச் சொல்!"

பெண்புரு என்ன நினைத்ததோ தெரியவில்லை. கழுத்தைத் திருப்பி ஆண்புருவைப் பார்த்தது. இப்போது ஆண்புருவே மளமளவென்று பேசிற்று.

"உயரத்தைக் கிட்டுபவர்களையே அமைதி விட்டு விடும் என்பார்கள். எங்களுக்கு வேண்டுமானல் இது பொருந்தலாம். ஆனல், மேகங்களே! உங்களுக்கு..."

"நிறுத்துங்கள்!—எண்ணினல் மயக்கம் வரும் எங்கள் புண்ணான நிலை உங்களுக்குத் தெரியாது!"

பரிதாபத்தோடு பார்த்தது ஆண்புரு. பேசியது.

"கார்மேகங்களே! காலியான பட்டணம் போலல் லவா வெறிச்சென்று காணப்படும் வானம்! நீங்கள் அதை விட்டு விலகி மறைந்துவிட்டால்!

அநுபவிப்பவர்கள் உணர்வதுபோல் அந்தப் பலனை அளிப்பவர்களும் உணர்வதுதான் அருமையாய் இருக்கிறது. அப்படி உணாந்தால்...? மதுவின் சுவையை அதை மொண்டு உண்ணும் வண்டுதான் உணர்கிறது என்பதில்லை. அளிக்கும் தாமரையே அதன் பெருமையை உணர்கிறது. அதனுல்தான் சிரிப்புடனும் சிறப்புடனும் காலை பிறந்ததுமே தினம் தினம் காணப்படுகிறது தாமரை!

பார்க்கும்போதே பல வடிவெடுக்கும் மேகங்களே சித்தாந்தியும் உங்களிடம் மனதை இழக்கிருன், புத்தியில்லாதவனும் உங்களின் வனப்பைப் பார்த்துச் சித்திரத்திலுள்ள சிலையாகி விடுகிருன். காவியக்காரனுக்கு ஏட்டில் ஓவியம் தருவதும், ஓவியக்காரனுக்குத் திரையில் காவியம் தருவதும் உங்கள் உருவந்தானே! இன்னும் கேளுங்கள்! அடிமேல் அடிவைத்துச் செல்லும் தண்ணீருக்கு உயரே ஆகாயத்தில் நிற்கும் மீன்கொத்திப் பறவையின் இறக்கைகளில் உள்ள அந்தத் துடிதுடிப்பு அதைத் தன் நெஞ்சில் புகுத்திக்கொண்டு தாபம் நிறைந்த காதலன் நெருங்குகிருன். மீன்விழியாளின் நிலா முகம் நாணத்தால் கவிழ்கிறது. இதைப் பார்த்து வெட்கத்தால் துடி துடிக்கும் மாலை நிலா தன் உடலை ஒளித்து மறைத்துக்கொள்ள மேகத் திரைகள் தாமே உதவுகின்றன.

பழந்தின்னும் வௌவால்கள் எங்களுக்குப் பல தடவை சொல்லியிருக்கின்றன. கண்ணைச் சிமிட்டும் நட்சத்திரங்களும், எண்ணத்தில் வீழ்ந்தவனைப்போல் காணப்படும் வெண்ணிலாவும் மட்டுமே வானத்திலிருந்திருந்தால், பார்வையில் சலிப்பு குழந்தைப் பருவத்தி

லேயே வேர் விட்டிருக்கும். ஆனுல்...? மேயும் நட்சத்திரங்களும் காயும் நிலவும் பார்க்கப் பார்க்க ஆவலை வளர்த்து வளர்த்து விடுவதின் காரணமென்ன? வித விதமாகச் சிதறி, மேகங்கள் புதுப்புது இடங்களில் படிவதுதான்!

மேகங்களே! நீங்கள் சிறுவர்கள் நினைக்கிறபடியெல்லாம் உருவங்கள் எடுக்கிறீர்கள்—நீங்கள் உருவங்கள் எடுக்கிறபடி யெல்லாம் சிறுவர்கள் நினைக்கிருர்கள், அதனுல் அவர்கள் சிரித்து மகிழ்கிருர்கள்!

மேகங்கள் ஓடுகின்றன. பார்த்து கலாப மயில் ஆடுகிறது. மயிலாடக் கண்டு மழலைப் பிள்ளை கை கொட்டி ஆடுகிறது. பிள்ளை ஆடுவது கண்டு தாயின் முகத்தில் சிரிப்பு விளையாடுகிறது. இதைக் கண்டு தந்தையின் அகத்திலெல்லாம் மகிழ்ச்சி ஓடுகிறது. இக் காட்சியைக் கண்டு இல்லறம் பாடுகிறது. இல்லறம் பாடுவதால் எல்லா அறமும் அங்கே கூடுகின்றன!...''

—ஆண்புரு இப்படிப் பேசிக்கொண்டே இருந்தது. இரண்டு புருக்களுமே மிதந்து கொண்டுதான் பறந்து கொண்டிருந்தன. ஆனுல்...? திடீரென்று மேகங்கள் அவிழ்த்துவிட்ட கன்றுகளைப்போல் அவசரமாக ஓடின. புருக்களின் சிறகடிப்பிலும் புள்ளி மானின் கால்களின் வேகம் புகுந்தது. ஆண்புரு அப்போதும் பேச்சை நிறுத்தவில்லை. பேசிக்கொண்டே இருந்தது.

"உங்களுக்குப் பீடுகள் இவ்வளவு உள்ளன, மேகங்களே! நீங்கள் வாடுவதாகச் சொல்கிறீர்களே; இதில் உண்மையை நாங்கள் எங்கே தேடுவது?''

"வெண்புருக்களே! வேதனை எங்களை வெந்து மடிய வைக்கிறது. நீங்களோ சொற்களை அடுக்கி..."

"தவறு! சொற்களை அடுக்கினால் அகராதிதான் உருவாகும். நாங்கள் சொற்களை அடுக்கவில்லை—கருத்துக்களையே தொடுக்கிறோம், உண்மையை அழகாக எடுத்துச் சொல்ல! ஏன் இப்படித் திடீரென்று ஓடுகிறீர்கள்? என்ன வேதனை உங்களுக்கு?"

"தாய் தந்தையர்கள் கண்ணெதிரே தெரிந்தும் நாங்கள் அனாதைப் பேய்களாய் விண்ணில் அலைந்து திரிகிறோம். இல்லை, அலைந்து திரிகிறோம் என்பது அவ்வளவும் பொய்! ஆமாம், பொய்தான்-பொய்! கண்ட கண்டபடி உழைக்கும் காற்றுக்கேற்ப உருண்டோடும் கால் பந்துகள் நாங்கள் கலக்கம்!—கவலை—கஷ்டம், எங்கள் உள்ளத்தில்—இடத்தில்—உடலில்! எதற்காகப் பிறப்பிக்க வேண்டும் எங்களை?"

"ஏன் பிறந்தோம் என்று கேட்கிறீர்களா? பிறந்த உங்களுக்கு மட்டுமல்ல. பிறப்பித்தவர்களுக்கே அந்தக் கேள்விக்குப் பதில் தெரியாதே!"

"அப்படியானால் கொட்டி வதைக்கும் வாழ்க்கையை விட்டு விலகிவிட்டால் என்ன?"

"தற்கொலை!—கையாலாகாதவர்களின் கண்மூடி வேலை யல்லவா அது!"

"வதைபடுகிறோமே புருக்களே; இதைக் கவனிக்க வேண்டாமா நீங்கள்?"

இரண்டு புருக்களுமே சிரித்துவிட்டன. ஆண்புரு கேட்டது.

"மேகங்களே! இன்பம் என்பது என்ன என்று தெரியுமா உங்களுக்கு?"

"எப்போதாவது இன்பத்தை அநுபவித்திருந்தாலல்லவா தெரியும் இப்போது சொல்வதற்கு!"

சிரிப்பு வெடித்துச் சிதறியது ஆண் புருவிடமிருந்து. பேசியது.

"மேகங்களே! இன்பத்தையே உணராதவர்களுக்குத் தாங்கள் அநுபவிப்பது துன்பம் என்பது எப்படித் தெரியும்? பிறவிக் குருடனுக்கு இரவு ஏது? உண்மை இதுதான். இன்பத்திலேயே புரள்பவர்கள் இருக்கிறார்கள் சிலர். துன்பத்தைப் பற்றிப் பிறர் சொல்லக் கேட்டிருப்பார்கள், அல்லது படித்திருப்பார்கள். எங்கே அந்தத் துன்பம் தங்களைப் பிடித்துக்கொள்ளுமோ என்று எப்போதும் பயம் அவர்களுக்கு. அந்தப் பயத்தால் தம்மிடம் வந்து சேருகிற இன்பத்தை யெல்லாம் கண்டு 'துன்பம்! துன்பம்!' என்று துள்ளிக் கூக்குரலிடுவார்கள் அவர்கள்!"

"அவர்களல்ல நாங்கள்—புருக்களே! அறியாமல் பேசாதீர்."

"என்னதான் நீங்கள் சொல்லுகிறீர்கள்?"

"இங்கே இந்த வாழ்க்கை எங்களுக்குப் பிடிக்கவில்லை."

"புரிந்துகொள்ள முடியாதது பிடிக்காததாய் விடுவது உண்டு!"

"புதிர் போடவேண்டாம். வாழ்க்கை என்பதுதான் என்ன?"

"வேண்டாமலே கிடைத்த—வேண்டினும் நீக்க முடியாத ஒரு சந்தர்ப்பம் வாழ்க்கை?"

"சந்தர்ப்பமா? எதற்கு?"

"தகுதியான பிறருக்கு மிகுதியான நன்மை செய்ய."

"நன்மை செய்வதற்கே திறமை வேண்டாமா?"

"தேவை ஏற்பட்டுவிட்டால் திறமை ஏற்பட்டுவிடும் —இல்லாவிட்டால் ஏற்படுத்திக்கொள்ள முடியும்."

"வெண்புருக்களே! வேதனையை அதிகமாக்காதீர்! இங்கே நாங்கள் யாருக்கு உதவி செய்வது?"

"மேகங்களே! நன்மை தேவைப்படும் இடம் உயர மல்ல—கீழே! உயரத்திலிருப்பவர்களுக்கே நன்மை தேவைப் படுவதில்லை—அப்படித் தேவைப்படும் போது செய்தாலும் அது அவர்களுக்குச் செய்வதாகாதே, அவர்களுக்குச் செய்வதின் மூலம் தங்களுக்கே செய்து கொள்வதல்லவா அது!......"

திடுக்கிடும் சம்பவம் ஒன்று திடீரென்று நடந்தது. பேச்சு இடையிலே அறுந்தது. இரண்டு புருக்களும் அபாரமான வேகத்தில் இறக்கைகளை அடித்துக்கொண்டு நிலம் நோக்கி ஓடின. அப்போதுதான் மேகங்களுக்கு உண்மை புலப்பட்டது. எதிரே ஒரு வல்லூறு வேக மாகப் பறந்து வந்துகொண் டிருந்தது.

"உயரத்தைக் கிட்டுபவர்களையே அமைதி விட்டு விடும் என்பார்கள்."—புருக்கள் சொன்ன இந்த வாக் கியம் மேகங்களின் நினைவு வானில் வானவில்லாகத் தோன்றி நிலைத்தது. கணப்பொழுதுதான், வானவில் காணாமலே மறைந்து விட்டது; கவலை மேகங்கள் கூடி

முழங்கின. புருக்கள் இப்போது புள்ளிகளாகி மறைந்து விட்டன.

"நன்மை தேவைப்படும் இடம் உயரமல்ல—கீழே!" புருக்கள் சொன்ன இந்த வார்த்தைகள் தேனீக்களாகி, மேகங்களின் இதயமெல்லாம் கொட்டத் தொடங்கின. உடனே—உடனே கீழே இறங்கவேண்டும் என்று அவை துடியாய்த் துடித்தன!

கீழே எப்படி இறங்குவது என்று வழி தெரியாமல் விழித்தன மேகங்கள். கண்ணுக்கு வெகு தூரத்தில் இன்னும் சில மேகங்கள் தெரிந்தன. வேகமாக வீசியது காற்று. எந்த வழியாகக் கீழே இறங்கலாம் என்று அந்த மேகங்களைக் கேட்டால் ஒருவேளை அவை வழி சொன்னாலும் சொல்லலாம் என்று அவை நினைத்தன. ஆனால்...? அருகே வந்தபோதுதான் புரிந்தது. மேகங்களல்ல அவை. பரந்து விரிந்து உயர்ந்து கிடக்கும் மலைச் சிகரங்களே அவை!

பெண்ணின் புகைப் படத்தையாவது பார்க்க வேண்டும் என்று இரங்கிய குரலில் வேண்டிய பிள்ளையாண்டானிடம் அந்தப் பெண்ணையே எதிரே காட்டிப் பேச வைத்தால் அவன் மகிழ்வதுபோல மேகங்கள் மகிழ்ந்தன. சிகரங்களின் உச்சியில்தான் வழியிருக்கும் என்று சிந்தித்துக்கொண்டே இருக்கும்போது அவை தம்மை யறியாமலே உயரே போயின.

குளிர்ந்து குதூகலமடைந்தன உயரே போன மேகங்கள். அழிந்தது பழைய உருவம். அவை தூறல்களாகக் கூடிப் பெருமழையாய்ப் பொழிந்தன. இன்னும்

எங்கெங்கிருந்தோ புதுப்புது மேகங்கள் வந்துகொண்டிருந்தன. பெருமழை பொழிந்து கொண்டே இருந்தது!

தங்களின் புதிய நீருருவம் கண்டு மேகங்கள் பூரித்துப் போயின; மலையில் இறங்கியதுமே மகிழ்ச்சி அலை மோதியது; அருவியாகிப் பாறைகளையே சேர்த்து அணைத்துக்கொண்டு பரவசத்தால் ஊர்ந்து ஓடின; அருவி ஓடியது!

இலட்சியத்தை நோக்கி ஓடும் செயலாளிபோல வழியின் இடர்களை அலட்சியப் படுத்திவிட்டு வளைந்து வளைந்து மலையிலிருந்து ஓடியது அருவி.

புத்தம் புது அருவி இத்தனை ஆர்வத்தோடு இறங்குவது கண்டு சித்தம் மகிழ்ந்து சிரித்தது மலை! அந்தச் சிரிப்பு, பாறைகளாய் உருட்டப்பட்டு உடைந்து அருவியுடன் உருண்டு ஓடித் தெறித்தது. இதனால்—குதூகலத்தால் கூச்சலிட்டுப் பறவைகள் மரத்திலிருந்து குபீரென்று எழுந்து பறந்தன. தண்ணீர் குடிப்பதற்காக வந்துகொண்டிருந்த ஒரு வரிப்புலி, நின்று தலையைக் கம்பீரமாகத் தூக்கி விழியின் ஓரத்தைத் திருப்பியது! ஒரு மரத்தின் கிளையிலிருந்த தேன் கூட்டினின்று தேன் வழிந்துகொண்டிருந்தது. வரிப்புலியின் வாயில், இக்காட்சியைக் கண்டு உமிழ்நீர் ஊறியது; வழிந்து கொட்டிய தேனையெல்லாம் இழுத்துக்கொண்டு ஓடியது அருவி. ஓர் இடத்தில் அருவியின் தண்ணீர் குடிக்க வந்த மந்தி இந்தத் தேன் மதுவை அள்ளி அள்ளிக் குடித்தது—போதை தலைக்கேறியது—நிலை தடுமாறியது; துள்ளிக் குதித்து ஓடி எதிரே வந்த ஒருகரடியைப் பெண் குரங்கென்று கருதி கட்டியணைத்து அது முத்தமிட்டது!...

செந்தேன் சிந்தும் இந்தக் காட்சியெல்லாம் கண்டு சிந்து பாடிக்கொண்டே ஓடிக்கொண் டிருந்தது அந்தச் சிங்கார அருவி!

அருவி மலையைவிட்டு இறங்கி மேட்டில் வெகுதூரம் கடந்து வந்தது. அகலமாக விரிந்து கிடந்த மேட்டைக் கண்டு தானும் அகலமாகப் பரவித் தன்னுடைய ஓட்டத்தைப் பெருநடையாக மாற்றி வந்து கொண்டிருந்த அருவி, மேட்டின் இறுதியைக் கண்டது. பல நூறு அடிகளுக்குக் கீழே அடிநிலம் தெரிந்தது. பெருங்கூச்சலிட்டு ஆனந்தத்தோடு கீழே குதித்தது அருவி!

"அருமையான நீர்வீழ்ச்சி!" என்று யாரோ கூவினார்கள், பார்த்தது அது!

எவ்வளவோ ஆண்களும் பெண்களும் நீர்வீழ்ச்சியின் எழில்வீச்சைப் பார்த்துச் சுவைத்துக் கொண்டிருந்தனர். பார்த்துக்கொண்டே சிரித்துப் பேசிக்கொண்டிருந்தனர் பலர்—சிரித்துக்கொண்டே பார்த்து அதில் குளித்துக் கூத்தடித்தனர் பலர். புலவர் ஒருவர் சளசளவென்று பேசத் தொடங்கி விட்டார்.

"மலைச்சாரல்களிலே குதித்து வரும்போது அருவி!—மேட்டிலே யிருந்து பள்ளத்திலே பாயும்போது நீர்வீழ்ச்சி!—விழுந்த நீர்வீழ்ச்சி சமவெளியில் நடந்து செல்லும்போது ஆறு!—என்ற முப்பெரும் முகில்களே! உங்களுக்கு முப்பேரோ?"

—புலவர் இவ்வாறு பேசிக்கொண்டே இருந்தார்.

வேர் விடும் உற்சாகத்துடன் நீர்வீழ்ச்சி நீண்டு நெளிந்து வளைந்து ஆறாக ஓடியது!

அது பட்ட இடமெல்லாம் பயிர்; தொட்ட இடமெல்லாம் உயிர்; தட்டுப்பட்ட மண் எல்லாம் கட்டிப் பொன்ளுகி களுக்கெனச் சிரித்தது. வெள்ளத்தின் உள்ளத்தில் களிப்பு, கரை புரண்டது. அதனுல், கரைகள் 'இடி இடியெனச்' சிரித்து ஆற்றுடன் கரைந்தன—மறைந்தன!

புதிய இடத்திற்கெல்லாம் ஆறு அதிக வேகத்துடன் நடந்தது. கூடினர் மக்கள். பாடினர் பாக்கள். சித்திரம் தீட்டினர். பித்தர்போல் ஆயினர். ஆடினர். ஓடினர். குதித்தனர். கூவினர். வாழ்த்தினர். வணங்கினர்.

**வற்றிய இடமெலாம்**
**வாழ்வு பற்றியது!**
**வறண்ட இடமெலாம்**
**வளமை புரண்டது!**
**பாலைவனம் சோலை**
**வனமாகியது! அதில்—**

காலை மாலை, பகல் இரவு—எல்லா வேளைகளும் பறந்தன; மறந்தனர் மக்கள்! வானம் உருகும் கானம் பிறந்தது. பிரிந்து தனியே ஆண்களைக் காண முடியவில்லை—அச் சோலைவனத்தில், பிரிந்து தனியே பெண்களைக் காண முடியவில்லை! ஆனுல்...? 'ஆண்—பெண்' கூட்டம் பொங்கும் அந்தக் கானகத்தில் மங்காத கானமாகி எங்கும் காணப்பட்டது!

"உணர்ந்தேன் வாழ்க்கையை — வாழ்க்கையை உணர்ந்தேன்"—என்று சொல்லிக்கொண்டே உவகையின் உருவமாய் உருண்டு ஓடிய ஆற்றைக் கடல் தாய். அப்படியே இறுக்கி உச்சிமோந்து தன் உடலில் ஒன்ருக்கிக் கொண்டாள். அந்த ஆனந்தத்தால் கடல்தாயின் உடலில் ஏற்பட்ட சிலிர்ப்பு, அலைகளாய்ச் சிரித்தது!

# இயற்கை சிரிக்கிறது?

வீட்டுத் தோட்டத்தின் பறவைகள் போட்ட கூச்சலால் கண்விழுத்துப் பார்த்தான் வெல்வட் மெத்தையில் படுத்திருந்த செல்வநாயகம். திறந்திருந்த சன்னல் வழியே பரந்து கிடந்த வானம் அவன் பார்வையில் பட்டது. நட்சத்திரங்களாகிய மல்லிகை அரும்புகளையும் நிலவாகிய மலர்ந்த அல்லியையும் இருளாகிய பட்டுத் துணியால் மூட்டையாகக் கட்டி எடுத்துக்கொண்டு இரவு மங்கை எட்டி ஓடிக்கொண்டிருந்தாள். அந்த மூட்டையிலிருந்து சிதறிய ஓரிரு மல்லிகை அரும்புகள் இன்னும் ஒளியைச் சிந்திக்கொண்டிருந்தன. காலை ஒளிக் கதிர் தலை நீட்டிக்கொண்டிருந்தது. செல்வநாயகத்தின் காதுகளில் பறவைகளின் கலகல ஒலி மீண்டும் நிறைந்தது. அந்த ஒலியைக் கூச்சல் என்றுதான் நினைத்தான். ஆனால் ஒரு கணத்துக்குள் அவன் அந்த நினைவை மாற்றிக் கொண்டான். தன் வருகையை உணர்ந்து வெட்கத்தால் தாக்கப்பட்டுக் கால் பிடரியில் பட ஓட்டமெடுக்கும் இரவு மங்கையைக் கண்டு பகல் அரசன் கலகலவென்று சிரிக்கிறான்! பறவைகளின் ஓசையல்ல, பகல் அரசனின் சிரிப்பு இசை அது! இப்படி எண்ணியது அவன் மனம். மறுநாள் இரவு பதினொருமணிக்கு வரும் புகைவண்டியில்

தான் அவனுடைய மனைவி வருகிறாள். முதலில் பெற்றெடுத்த பெண் செல்வமாகிய வைரமணியைத் தூக்கிக் கொண்டு அவளுடைய தந்தையுடன் கணவன் வீட்டுக்கு வருகிறாள். இந்த எண்ணம் செல்வநாயகத்துக்கு அவன் தூக்கத்தைப் போக்கிவிட்டிருந்தது. கட்டிலில் படுத்திருந்தவாறே இமை கொட்டாமல் வானத்தையே பார்த்துக்கொண்டிருந்தான். நிலவுமங்கை வான அரங்கில் நடனமாட வந்து நிற்கிறாள். நட்சத்திரக்கூட்டம் மகிழ்ச்சியால் நகைக்கிறது. இப்படி எண்ணினான். அது வெண்ணிலவு அல்ல—வெள்ளைத்தாமரை! அதைச் சுற்றிப் பல திசைகளிலும் பரவிக் கிடப்பவை நட்சத்திரங்களல்ல சுவைத்தேன் பருகுவதற்காகச் சுற்றிப் பறக்கும் பொன் வண்டுகளே அவை!..........இப்படியும் எண்ணினான். வெள்ளித் தட்டிலே குவித்து வைத்திருந்த வெண் முத்துக்களை வேண்டுமென்றே யாரோ தட்டிவிட்டிருக்கிறார்கள். அவையே இப்படி வானத்தில் கொட்டிக் கிடக்கின்றன. அவைகளைப் பொறுக்குவதற்காகப் பாடிக் கொண்டே மேகதூதர்கள் ஓடிக்கொண்டிருக்கின்றனர். இப்படிப்பட்ட கற்பனைகள் ஒன்றன்பின் ஒன்றாக அவன் மனக் குளத்தில் கல்லை எடுத்துப் போட்டதும் தொடர்ந்து எழும் வட்ட அலைகளைப்போல் படர்ந்து கொண்டிருந்தன. இன்றிரவு இப்படி. நாளை இரவு? நாளை இரவா?...... இன்றிரவு பாலை! நாளை இரவோ சோலை! இன்றிரவு தன்னந் தனியாகத் தவிக்கிறேன். நாளை இரவு, ஒருபக்கத்தில் மனைவி நீலமணி—மறுபக்கத்தில் செல்வம் வைரமணி! சேச்சே.....நாவால் தொட்டு உண்ணக்கூடிய கோமள இதழ்களைக் கொண்ட குழந்தைக்கும், தோண்டி உண்ணக்கூடிய கொவ்வை இதழ்படைத்த மனைவிக்கும்

இடையில் நான் படுத்திருப்பதா?......சேச்சே..........
எங்கள் இருவருக்கும் இடையில்தான் மங்காத தங்கக் கட்டிக்கு இடம் இருக்கும்! வைரமணிக்கு ஒருபக்கத்திலே நீலமணி—எதிர்ப் பக்கத்திலே நான்! அதுதான் முறை! ......செல்வநாயகத்தின் எண்ணங்கள் சிறகடித்துப் பறந்து கொண்டிருந்தன. அதனுல் அவன் இமைகள் திறந்த வண்ணமே இருந்தன. புரண்டு புரண்டு படுத்து உறக்கத்திற்கு அழைப்பு விடுத்து விடுத்துப் பார்த்தான். பலன் இல்லை. திறந்த சன்னல் வழியே தெரிந்த பரந்த வானத்தில் அவன் பார்வை பறந்த வண்ணமிருந்தது. நிலவு ஏன் இப்படிச் சிரிக்கிறது? நட்சத்திரங்கள் ஏன் இப்படி நகைத்துக் கொண்டே இருக்கின்றன? இயற்கை ஏன் இப்படிச் சிரிக்கிறது! அவன் இதயம் கேட்டது! கேட்டுக்கொண்டே இருந்தது. எப்போது அவன் தூங்கினுனே, தெரியவில்லை!......வீட்டுத் தோட்டத்தின் பறவைகள் போட்ட கூச்சலால் கண்விழித்தான். இரவு எட்டி ஓடிக்கொண்டிருந்தது. பகல் எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. பறவைகளின் கூச்சல்—அது கூச்சல் அல்ல, காலைக் கன்னி உலகில் அடி யெடுத்து வைக்கிருள். அவள் காற்சிலம்பு கலகலவென்று சிரிக்கிறது. பறவைகளின் புலம்பல் அல்ல—காலைக் கன்னியின் சிலம்பின் சிரிப்பு அது! செல்வநாயகம் எண்ணினுன். நாளை இரவு—நாளை இரவு என்று எண்ணி ஏங்கினேன். இனி அது கழிந்தது. இனி இன்று இரவு——ஆமாம் இன்று இரவு நீலமணி வரப்போகிருள்— செல்வம் வைர மணி வரப்போகிருள். தாத்தா வீட்டிலிருந்து அப்பா வீட்டுக்கு வரப் போகிருள். நீலமணி பிள்ளைப்பேற்றுக் காகத் தாய் வீடு சென்று இன்ருேடு ஏழு மாதங்கள்

ஆகின்றன. இப்போது ஆறு மாதங்களே ஆன அழகுச் சிலையை அணைத்துக்கொண்டு கணவன் வீட்டுக்கு— இல்லை—அவள் வீட்டுக்கு—இல்லை இல்லை என் வீட்டுக்கு—இல்லை இல்லை, எங்கள் வீட்டுக்கு வரப் போகிறாள் நீலமணி!——குளிர்ந்த காற்று சன்னல் வழியே குதித்தோடி வந்து அவன் உடலை மிதித்து அப் பால் மிதந்து சென்றது. அவன் கையில் கட்டியிருந்த வைரம் பதித்த தங்கக் கடிகாரத்தைக் கண்ணுக்கு முன்னே கொண்டு வந்து பார்த்தான். ரேடியம் பதித்த முட்கள் மணி ஐந்தரை என்று குறித்தன. எழுந்து உட் கார்ந்தான். எண்ணங்களிலே நடந்து சென்றான். கிழக்கு வானத்திலே கதிரவன் சிவப்பு வண்ணத்தைப் பூசினான்

செல்வநாயகம் வீட்டை விட்டு வெளியே வந்தான் அருகே உள்ள குளக்கரையில் வந்து அமர்ந்தான். கூடியிருந்த பச்சை இலைகள் குளத்தின் தண்ணீர் முழு வதையும் மூடிக் கிடந்தன. அவைகளுக்கு மேலே தாமரை மலர்கள் மலர்ந்து இருந்தன. இலைகள் குறைந்த ஒரு பகுதியில் கையின் கட்டை விரலைப்போல் அலகையும் ஓய்யாரமாக வளைந்த கழுத்தையும் கொண்ட வாத்து ஒன்று நீரில் நீந்திக்கொண்டிருந்தது. வினாக் குறி ஒன்று மிதந்து செல்வதைப்போல் வாத்து விளங் கியது. எங்கோ இருக்கும் கதிரவனைக் கண்டு ஏன் இந்தச் செந்தாமரைகள் சிரித்துக்கொண்டிருக்கின்றன என்று குளம் கேட்கும் கேள்விதானோ இந்த வாத்தாக விளங்குகிறது? செல்வநாயகம் சிந்தித்தான். இல்லை — சிரிக்கும் தாமரையைக் கண்டு சிரித்ததால்தான் முகம் சிவந்து விளங்குகிறான் கதிரவன். கதிரவன் ஏன் இப்

படிச் சிரிக்கிருன்? நேரம் கழிவது தெரியாமல் குளத்தின் எழிலில் நீந்திக்கொண்டிருந்தது அவன் நெஞ்சம்.

குளக்கரையை விட்டு எழுந்து கடற்கரையின் ஓரத்தில் நீருக்குப் பக்கத்தில் அவன் மெல்ல நடந்து சென்ருன் நீர்ப்பரப்பின் கோடியிலே நெருப்புப் பந்தாக விளங்கிக் கொண்டிருந்த கதிரவன் எண்ணெய் நிறைந்த அகல விளக்கிஞல் ஏற்றி வைத்த சுடரைப்போல் தோற்றமளித்துக்கொண்டிருந்தான். ஓசையிட்டவண்ணம் ஓடிவந்து கொண்டிருந்த அலேகள் தரையைத் தழுவியதும் நழுவி மறைந்து கொண்டிருந்தன. அலேயின் ஓசையல்ல இது. கடல் கடகடவென்று சிரிக்கிறது. அந்தச் சிரிப்பொலி தான் இது! கடல் ஏன் இப்படிச் சிரிக்கிறது? செல்வ நாயகம் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

அன்று அரவு புகைவண்டி நிலேயத்தை அடைந்து நீலமணியை ஏற்றிவரும் வண்டி வந்து சேரும் வரையில் அவன் மனம் இப்படியே சிந்தனேயலேகளில் மிதந்து கொண்டிருந்தது. வண்டியிலிருந்து கூட்டம் இறங்கியது. செல்வநாயகம் ஒவ்வொரு பெட்டியாக ஓடிப் பார்த்துக் கொண்டிருந்தான். 'அதோ மாப்பிள்ளே' என்ற குரல் கேட்டுத் திரும்பினுன். பக்கத்தில் அவன் மாமா கலங்கிய முகத்தோடு நின்றிருந்தார். பக்கத்தில் நீலமணி அவனேப் பாாத்ததும் விக்கி விக்கி அழத் தொடங்கிஞள். துணியால் மூடி அவள் தோளில் சாய்த்தவாறு வைத்திருந்த குழந்தை— துணியை விலக்கிஞன்......குழந்தையின் தலேயில் பஞ்சு வைத்துக் கட்டுப் போடப்பட்டிருந்தது! குழந்தை தூங்குகிறதா? அல்லது மயங்கிக் கிடக்கிறதா? ஏன்! என்ன? என்ன நேர்ந்தது குழந்தைக்கு?

கன்னத்தில் குழந்தைக்குக் குறுக்கும் நெடுக்கும் ‘பிளாஸ்திரி’ . போடப்பட்டிருந்தது! புகை வண்டியில் சன்னலுக்குப் பக்கத்தில் விளையாட்டுக் காட்டிய வண்ணம் நீலமணி இருந்தபோது, ஓடும் புகைவண்டியிலிருந்து குழந்தை கீழே விழுந்துவிட, பிறகு வண்டியை நிறுத்த, குழந்தை நல்லவேளை இந்த அளவோடு தப்பியது என்ற உண்மையைச் செல்வநாயகம் அறிந்தபோது, அவன் மனம் துணுக்குற்றது. போன மாதம் குழந்தையைப் பார்த்துவிட்டு வரும்போது குழந்தை வைரமணி எவ்வளவு சுறுசுறுப்போடு விளங்கினாள்? பறக்கும் பட்டுப் பூச்சிதான் அவன் நினைவுக்கு வந்தது அப்போது!— இப்போது அந்தப் பட்டுப்பூச்சி, சிறகைப் பிய்த்துப் போட்ட பட்டுப்பூச்சி எப்படித் தரையில் புழுவாக அசையுமோ, அதைப் போலல்லவா இருக்கிறது! அவன் கண்கள் அருவியாயின.

...டாக்டர்கள் வீட்டில் குழந்தையைப் பரிசோதித்து விட்டு, மருந்து தந்தனர். குழந்தையின் உயிருக்கு அபாயம் இல்லை என்பதை டாக்டர்கள் ஏன் இருந்தாற் போல் சொல்லவேண்டும்? செல்வநாயகத்தின் உள்ளம் துடித்தது!

கட்டிலில் கிடந்த குழந்தைக்குப் பக்கத்தில் கண்ணீர் வடித்த வண்ணம் உட்கார்ந்திருந்தாள் நீலமணி. பக்கத்தில் நாற்காலியில் அமர்ந்து, திறந்த சன்னல் வழியே தெரிந்த பரந்த வானத்தைப் பார்த்துக் கொண்டு சிலையாகச் சமைந்து விட்டான் செல்வநாயகம். நேற்றைப் போல்தான் வானத்தில் நிலவும் நட்சத்திரங்களும் இருந்தன. செல்வநாயகம் கருதினான். நட்சத்திரங்கள்

ஏன் இப்படி நடுங்கிக் கொண்டிருக்கின்றன? நிலவு ஏன் இப்படி அழுதுகொண்டிருக்கிறது? நாற்காலியில் சாய்ந்திருந்த அவன் எப்போது கீழே படுத்தானே தெரியாது. வீட்டுத் தோட்டத்தின் பறவைகள் போட்ட கூச்சலால் கண் விழித்தான். பறவைகளின் கூச்சல் அல்ல அது. செத்துக் கொண்டிருக்கும் இரவு மங்கையின் அழுகைச் சத்தமே அது! இப்படித்தான் கருதினன் அவன்.

கிழக்கு வானத்தில் கதிரவன் எழுந்தான். கதிரவனின் முகம் அழுது அழுது ஏன் இப்படிச் சிவந்துவிட்டது? கதிரவன் அழுகைக்கு காரணமென்ன? செல்வநாயகம் சிந்தித்தான். தொலேவில் கடலில் அலேகளின் ஓசை கேட்டது. அலேகளின் ஓசையல்ல அது. கடலின் ஒப்பாரி அது! கடலின் ஒப்பாரி அது!........கடல் ஏன் இப்படி இன்று அழுகிறது?...செல்வநாயகத்தின் இதயம் கேட்டது!

# தன்னை அறியாப் பூனையும் தன்னையறிந்த யானையும்

**வ**ரிப்புலியின் வண்ணப் படத்தைக் கண்கொட்டா மல் பார்த்தது அந்தப் பூனை.

பள்ளிச் சிறுவன் ஓயாமல் நெட்டுருப் போட்டு ஒலித்த பாடத்திலிருந்து அந்த வாக்கியம் திரும்பத் திரும் பப் பூனையின் எண்ணத்தில் பூத்து மறைந்து பூத்துக் கொண்டிருந்தது.

"புலிக் குடும்பத்தைச் சேர்ந்ததுதான் பூனைக் குட்டி!"

.........பழுப்பு நிறம் கொண்ட அந்தப் பூனை இந்த வாக்கியத்தைச் சிந்தித்த வண்ணம் எதிரே படத்திலிருந்த புலியைப் பார்த்துக் கொண்டிருந்தது. சித்திரத்திலுள்ள புலியைப் பித்துப் பிடித்தவனைப் போல் பார்த்துக் கொண் டிருந்தது அந்தச் செல்லப் பூனை.

'புலிக்கும் பூனைக்கும் என்ன வேறுபாடு இருக் கிறது?' அது நினைத்தது.

'புலிக்கும் பூனைக்கும் உருவத்தின் அளவிற்தான் வேறுபாடு—அமைப்பில் அல்ல!'—பூனை எண்ணியது.

'காட்டில் அதன் வாழ்வு பொங்கியது—ஆகையால் அது புலியாக இருக்கிறது! நாட்டில் இதன் வாழ்வு மங்கி விட்டது. ஆகையால் பூனையாகிவிட்டது!

அவ்வளவுதான். புலியும் பூனையும் ஒரே இனத்தைச் சேர்ந்தவை என்பதில் ஒரு சிறிதும் சந்தேகமில்லை!''..... பூனையின் எண்ணம் வளர்ந்துகொண்டே இருந்தது.

'புலிக்கும் பூனைக்கும் வேறுபாடு உருவத்தின் அள வில்தான்—அமைப்பிலல்ல! இருந்தாலென்ன? ஒன்பது அவுன்ஸ் நஞ்சுதான் உயிரைக்கொல்லுமா? ஓர் அவுன்ஸ் நஞ்சு உயிரைக் கொல்லாதா?' என்று பூனை வாலைச் சுழற்றிச் சுழற்றிச் சிந்தித்தது.

பள்ளிச்சிறுவன் புலியைப் பற்றிப் படித்த பாடத்தின் கருத்தைப் பூனை மீண்டும் எண்ணியது.

'புலி என்ன செய்யும்? பதுங்கும்—பாயும்—ஓடும்—இரைதேடும்! பூனையாகிய நானும் இதைச் செய் வேனே!'.....பூனை நினைத்தது—களிப்பால் கனைத்தது!

'இனி நான் புலிதான்!' என்று முடிவுக்கு வந்தது பூனை!

வீட்டில் யானைப்பாகன் படுக்கையில் படுத்திருந்த வன் காலை அசைத்தான். பூனை, திடீரென்று அவன் காலில் பாய்ந்து கடித்தது. அவன் திடுக்கிட்டு எழுந்து விளக்கை ஏற்றிப் பார்த்தான். அவன் வளர்த்த அழ குப் பூனை அப்பால் கூனிக் குறுகி உட்கார்ந்து உறுமிக் கொண்டிருந்தது! அதைக் கண்டான். தன் காலில் இரத் தம் வழிவதையும் கண்டான்! எலி என்று கருதித் தான் இரவில் பாய்ந்துவிட்டதோ பூனை என்று கருதினான்

பாகன். பூனை மீண்டும் பாய வந்தது! பக்கத்திலிருந்த கழியை எடுத்தான்! பூனை பயந்து ஓடியது!

.....மறுநாள் யானைக்குத் தீனி வைத்துக்கொண்டே பாகன், அங்கே யானைக் கொட்டகையைக் கூட்ட வந்த ஓர் ஓட்டனிடம் தான் வளர்த்த பூனைக்கு வெறி பிடித்து விட்டது என்றான்! அப்போது அவனுடைய பூனை அங்கே வழக்கம்போல் வந்தது—பாகன் விரட்டினான்! 'இனி நான் பூனையல்ல—புலி!' என்று நினைத்தது—கனைத்தது! பதுங்கியது—பாகன்மீது பாய்ந்தது! அதற்குள் ஓட்டன் பூனையின்மீது பாய்ந்து அதைப் பிடித்துத் தலையை அமுத்தியவண்ணம், நான்கு கால்களையும் சேர்த்துக்கட்டி நிலத்தில் போட்டான்!

"நல்ல பூனை! நாலு வருஷமாக வளர்க்கிறேன்—திருட்டுக்குணம் இல்லாத பூனை—இப்போது இந்தத் திடீர் நோய்க்கு ஆளாகிவிட்டது" என்று வருந்தினான் பாகன்!

"பூனைக்கறி சாப்பிட்டு, நீண்டநாளாச்சு—இன்று கிடைத்தது" என்று கட்டிய பூனையைக் கூடையில்வைத்து அதைத் தலையில் வைத்துக் கொண்டு சென்ற ஓட்டன் நினைத்தான்! பூனை உடலை ஆட்டி தலையைக் கூடைக்கு வெளியே நீட்டியது. அதன் பார்வையில் யானை பிளிறுவது தெரிந்தது! "யானை தன்னை அறியாததால் வாழ்கிறது—பூனை தன்னை அறியாததால் சாகிறது" என்ற எண்ணம் பூனையின் மனத்தில் பூத்தது.

அதே நேரத்தில் பாகனைக் கூப்பிட வந்த அவனுடைய மகன் பள்ளிச் சிறுவன் பாடத்தை முணு முணுத்தான்! "யானை தன்னை அறியாது—யானை தன்னை

அறிந்தால்......'' என்றான். அதற்குள் பாகன், சிறுவனை அழைத்துக் கொண்டு வீட்டுக்கு நகர்ந்தான்!

யானையின் காதுகளில் சிறுவனின் சொற்கள் பாய்ந்தன!

யானை தன்னை அறிந்தால்?...யானைக்கு என்ன பெருமை வரும்? யானை சிந்தித்தது! துதிக்கையைத் தலையிலடித்த வண்ணம் யானை மீண்டும் மீண்டும் சிந்தித்தது!

மறுநாள் குளிப்பாட்டுவதற்காகப் பாகன் யானையை ஓட்டிக்கொண்டு சென்றான்.

வழியில் யானை ஒரு மரத்தை முட்டியது — அது அசைந்தது யானை விரைவாக முட்டியது—மரம் கீழே சாய்ந்தது! பாகன் எவ்வளவோ அடக்கியும் அது அடங்க வில்லை. அங்குசத்தால் அதைக் குத்தினான். யானை அலறியது! அவ்வளவுதான். மறுகணம் அங்குசத்தைத் துதிக்கையால் இழுத்து அவன்மீதே வீசியது. பாகன் அலறிவண்ணம் ஓடினான். பக்கத்தில் உள்ளவர்களெல் லாம் பயந்து விலகினர். யானை ஒய்யாரமாக நடந்து சென்றது! யானைக்குப் புரிந்தது. யானை நினைத்தது.

“இவ்வளவு காலம் நம்முடையபலம் நமக்கே தெரிய வில்லை. அதனால்தான் ஆறடி மனிதன் நம்மை அடக்கி வந்தான்—அரையடி அங்குசம் நம்மை அடக்கியது! இப் போது என்னை நான் அறிந்துகொண்டேன், எல்லோரும் என்னைக் கண்டு ஓடுகிறார்கள்'' என்று யானை மகிழ்ச்சி யோடு எண்ணிப் பூரித்தது. பூரித்தவண்ணம் புதுநடை போட்டு நடந்தது. வழியில் வீதியில், சிறுவர்களைத்

துதிக்கையால் தூக்கி அவர்கள் அலறியதைக் கண்டு அகமகிழ்ந்து பிளிறிப் பிறகு அவர்களை வீசியெறிந்தது! குடிசையைத் தூக்கியது—கடையைக் காலால் உதைத்தது—மனிதர்கள் எல்லோரும் அலறி ஓடினர்......

“யானை தன்னை இதுவரை அறியவில்லை—இப்போது அறிந்துகொண்டது! யானை தன்னை அறிந்தால்... என்றான் அந்தச் சிறுவன். இப்போதுதான் புரிகிறது, யானை தன்னை அறிந்தால் என்னாகு மென்று” என்று யானை வெற்றிக்களிப்புடன் எண்ணியவண்ணம் பிளறியது. அதே நேரத்தில் படபடவென்று துப்பாக்கிக்குண்டுகள் நாலு பக்கங்களிலிருந்தும் யானையின் உடலில் பாய்ந்தன—யானை சாய்ந்தது!

ரிசர்வ் போலீசார் நீட்டிய துப்பாக்கிகளைக் கீழே சாய்த்தனர்! பாகனோ, “நல்ல யானை—திடீரென்று மதம்பிடித்துவிட்டது!” என்று அழு குரலில் கூறினான்!

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி.க. சண்முகம் நூலகம்.
தமிழ்ப்பல்துறை.

# உங்கள் அபிமானம் பெற்ற
# அருணோதயம் தரும் புதிய நூல்கள் !

## துப்பறியும் நாவல்கள் !

விகரு. இராமநாதன் எழுதிய

| | |
|---|---|
| கொண்டியூர் மர்மம் | ரூ. 1 - 50 |
| சந்தனத் தேவன் புதையல் | ரூ. 1 - 50 |
| மாய மனிதன் | ரூ. 1 - 75 |

## திருமணப் பரிசு நூல்கள்

பேராசிரியர் நா. பாண்டுரங்கன், M. A. எழுதிய

| | |
|---|---|
| இயற்கை சிரிக்கிறது ! | ரூ. 1 - 00 |

வே. கபிலன் எழுதிய

| | |
|---|---|
| நலம் பெற்று வாழ்க ! | ரூ. 1 - 25 |

## அருணோதயம்

ராயப்பேட்டை, சென்னை-14


Jacket Printed at Neo Art Press, Madras-2